விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 24
ஒலி 265 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 24 ஞாயிற்றுக்கிழமை (10.09.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### மொரோக்கோவில் நிலநடுக்கம்
# 1037 பேர் உயிரிழப்பு
## மரணங்கள் மேலும் அதிகரிக்கலாம்




(ராபத்)

வட ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான மொரோக்கோவில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நில நடுக்கத்தால் 1,037 பேர் உயிரிழந்து 20

# மனிதப் புதைகுழி
# 4ஆம் நாள் அகழ்வு
### மேலும் பல எச்சங்கள் மற்றும் புலிகளின் இலக்கத் தகடு மீட்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வின் 4ஆம் நாளில் மேலும் பல மனித எச்சங் 19

### ஆளுநரின் உத்தரவை மீறி
# திருமலையில் விகாரை
# அமைக்க முயற்சி
## இன முறுகல் ஏற்படும் அபாயம்

(திருகோணலை)

திருகோணமலையில் ஆளுநரின் உத்தரவை மீறி விகாரை அமைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வரு கின்றது. இதனால் இனங்களி டையே முறுகல் நிலை ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

*(19ஆம் பக்கம் பார்க்க)*



### கட்டைக்காடு பகுதியில்
## ஆசிரியை ஒருவரின் சங்கிலி அறுப்பு

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பகுதியில் ஆசிரியை ஒருவரின் தங்கச்சங்கிலிகளின் பாகம் அறுக்கப்பட்டுள்ளது.

நேற்று சனிக்கிழமை மாலை 4.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆசிரியை கட்டைக்காடு சென்.மேரிஸ் 19

## வவுனியாவில் விபத்து; கான்ஸ்டபிள் பலி

(வவுனியா)

வவுனியா - ஓமந்தை விளக்குவைத்த குளத்தில் இடம்பெற்ற விபத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பலியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு இவ் விபத்து இடம் பெற்றுள்ளது,

குறித்த விபத்தில் கண்டியை சேர்ந்தவரும் புளியங்குளம் பொலிஸ் கான்ஸ்டபிளுமான 55 வயதுடைய கருணாதிலக்க என்பவரே 19



நல்லூர்க் கந்தனின் கைலாசவாகன உற்சவம்

### சனல் 4 காணொலி தொடர்பாக
## விரிவான விசாரணையை நடத்த ஜனாதிபதி ரணில் தீர்மானம்

(கொழும்பு)

'ஈஸ்டர் ஞாயிறு' தாக்குதல் தொடர்பாக பிரித்தானியாவின் 'சனல் 4' ஒளிபரப்பிய நிகழ்ச்சி குறித்து விரிவான விசாரணை நடத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார். இதன்படி, 'சனல் 4' அம் பலப்படுத்தப்பட்டமை தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஓய்வுபெற்ற 19

### கிளிநொச்சியில் வெடிகுண்டு
#### மீட்க நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கரடிப்போக்கு சந்திக்கும் பரந்தன் சந்திக்கும் இடையில் ஏ9 வீதிக்கருகில் வெடிகுண்டு ஒன்று இனங் காணப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் இனங்காணப் 19

## ராஜபக்ஷக்களை கூண்டோடு கைது செய்து சிறையிலிடுங்கள்
### ரணிலிடம் சஜித் அணி வேண்டுகோள்

(கொழும்பு)

“இலங்கையில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்களிலும், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களிலும் ராஜபக்ஷக்கள் தொடர்புபட்டுள்ளனர் என்று "சனல் 4" தொலைக் காட்சி வெளியிட்டுள்ள வீடியோவில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

எனவே, ராஜபக்ஷக்கள் அனைவரையும் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.”

இவ்வாறு பிரதான எதிர்க்கட்சி 19

### 15ஆம் திகதி முதல்
## ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் அமுல்

(கொழும்பு)

ஊழல் எதிர்ப்புச் சட்டம் எதிர வரும் 15ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அதற்கமைய நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

யாழ் நகரில் கையடக்க தொலைபேசி நிலையத்திற்கு
1.விற்பனையாளர்
2.காசாளர்
3.பழக விரும்புபவர்
வயது 18 - 22
சம்பளம் 35.000/=
நேரம் 9 தொடக்கம் 5.30 வரை
(ஆண்/ பெண்) (17024)

**077 199 6117**

## ஜெனரேற்றர் விற்பனைக்கு Ingersoll Rand

♦40 KVA sound proof ஜெனரேற்றர் விற்பனைக்கு (3 phase and single Phase)
♦HYSTER FORKLIFT(2.5Ton) L PG Gas இல் இயங்கும் FORKLIFT விற்பனைக்கு (17028)

**075 8875 036**

## லொறி விற்பனைக்கு

26 சிறி TX Model
விற்பனைக்கு
(Original Coundition) (17028)

**075 8875 036**

## காணி விற்பனைக்கு

புத்தூர் நவற்கிரி வீதியை முகப்பாக கொண்டு நவற்கிரியில் 46 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு. (17000)

**077 706 6487**

## வேலைவாய்ப்பு

சுன்னாகத்தில் அமைந்துள்ள வர்த்தக நிலையத்திற்கு (Computer Billing) செய்யக்கூடியவர்கள்/ பழக விரும்புவர்கள் தேவை. (16990)
தகுதிக் கேற்ப சம்பளம் வழங்கப்படும்.
ஆண்கள் மட்டும்
தகைமை : அடிப்படை கணனி அறிவு அவசியம்
வயதெல்லை : 20 – 30 வரை

**076 540 4630**

## ஜெயக்குமார் திருமண சேவை மல்லாகம்

ஐரோப்பாவிலுள்ள சூரியன், செவ்வாய் மணமகன், மணமகளுக்கு ஊரிலுள்ள என்ஜினியர், IT, பல்கலைக்கழகத்தில் படித்த மணமகன், மணமகள் வேண்டும். உங்கள் தகுதிக்கு ஏற்ற மணமகன், மணமகள் பார்த்து தரப்படும்.

**021 491 9370**
**077 900 7091**
வைபர், வாட்சப் : 0049764752219

## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், அரச உத்தியோகத்தர், வங்கியாளர், ஆசிரியர்கள், தனியார் துறையினர் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக்கணக்கில் உள்ளனர்.
மிகப் பொருத்தமான ஜாதகங்களை உடன் பெற்றுக்கொள்ளலாம்.

264. ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.
021 222 9306,071 999 9306
077 138 7596 (C-7216)


# சனல் - 4 காணொலி ஆதாரமற்ற குற்றச்சாட்டு

## பாதுகாப்பு அமைச்சகம்

(கொழும்பு)

சனல் - 4 காணொளி ஊடாக முன்வைக்கப்பட்ட பொய்யான குற்றச்சாட்டுகளை இலங்கை அரசாங்கத்தின் சார்பில் பாதுகாப்பு அமைச்சு கடுமையாக மறுத்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்பு தொடர்பான சனல் - 4 இன் அறிக்கை நிகழ்ச்சியின் மூலம் இந்தக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில், இந்த அறிவிப்பின் மூலம் உண்மை, நீதி மற்றும் தேசத்தின் நல்வாழ்வுக்கான அரசாங்கத்தின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை பாதுகாப்பு அமைச்சகம் மீண்டும் வலியுறுத்துகிறது.

மேலும், எந்தவொரு நபரும் அல்லது நிறுவனமும் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமையை பாதுகாப்பு அமைச்சகம் மதிக்கிறது என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், சனல் - 4 ஆல் செய்யப்படும் அடிப்படையற்ற, தீங்கிழைக்கும் மற்றும் மோசமான ஆதாரபூர்வமற்ற கூற்றுக்களால் எழும் எந்தவொரு திட்டமிடப்படாத செயல்களுக்கும் அல்லது விளைவுகளுக்கும் சனல் 4 பொறுப்பேற்க வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சகம் வலியுறுத்துகிறது. (ம-7)


## வாடகைக்கு தேவை

கடையுடன் கூடிய வளவோ அல்லது சிறு வீட்டுடன் கூடிய வளவோ வாடகைக்கு தேவை!

- A9 வீதி மாம்பழம் சந்திக்கும் யாழ் நகரப்பகுதிக்கும் இடையில்
- யாழ் நகரப்பகுதியில்
- பருத்தித்துறை வீதியில் இருந்து நல்லூர் வரையில் உள்ள பகுதியில்
- காங்கேசன்துறை வீதியில் யாழ் நகரப்பகுதியிலிருந்து இரண்டு கிலோமீற்றர் தூரம் வரையில் (17010)

தொடர்புகளுக்கு
**077 593 0335**

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127


## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

10.09.2023





அமரர் கந்தையா துரைராசா
தோற்றம் 13.02.1928 மறைவு : 22.06.2022

அமரர் துரைராசா அன்னக்கிளி
தோற்றம் 21.11.1938 மறைவு : 21.09.2022

உயிர்தந்து உறவு கொண்டீர் – எம்
உளமெல்லாம் நீவீர் நிறைந்து நின்றீர்
கண் வழியே பார்த்த முதல் முகம் அம்மா
செவி வழி கேட்ட சொல் ஐயா
ஈர் ஆறு செல்வங்கள் நீவீர் ஈன்றி
இரவு பகல் பார கண் விழித்து காத்தீர் நீவீர்

நீவீர் எமக்களித்த கடன் இன்னும் போகலை
நாம் பட்ட கடன் இன்னும் உமக்களிக்க முடியலை
பட்ட கடன் தொட்ட கடன் எல்லாம் இருக்கையிலே!
பரதேசம் விட்டு நீவீர் விண்ணுலகு சென்றதேனோ!
இவ்வுலகு விட்டு நீவீர் அவ்வுலகு சென்று
ஓர் ஆண்டு சென்றதுவோ! ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
ஒற்றைக்குடிலில் உம் சத்தம் கேட்கலையோ
ஓடி வந்து அம்மா என்றழைத்திட வாசல் வந்து
கட்டி அணைத்திடும் உன் கைகள் காணலையே
கண்கள் குளமாகி கால்கள் தளருது
காலமெல்லாம் எமைக் காத்த கண்மனியை காணலையே!
கடுகளவும் கண் கலங்கா கால் ஓய உழைத்த எம் தந்தை இங்கில்லை
கணக்கு முடித்து காலனும் அவ்வுலகு கொண்டு சென்றான்
அவ்வுலகில் சிவன் பாதம் பற்றி நீவீர்; உம் ஆத்மா சாந்தி பெறட்டும்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், குடும்பத்தினர், பேரப்பிள்ளைகள்

17/24, நாவலடி லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி ரஞ்சிதம் கிருஸ்ணசுந்தரம்
தோற்றம் : 02.04.1960 மறைவு : 31.07.2021

ஓர் கருவில் உருவாகி ஓர் கூட்டுக்கிளியானோம்
ஓர் தட்டில் உண்டு வந்து ஓர் உயிராய் நாம் இருந்தோம்
சின்னக்கா என்றிருந்த சித்திர தேர் நீ எமக்கு
சிறு கண்ணில் நீர் வடிய சிங்காரி நீ எமை தவிக்கவிட்டு
சிற்றுலகு விட்டு நீயும் சிவனடி சேர்ந்திங்கு இரண்டாண்டு
சென்றதுவோ சிரித்த உன் வதனம் சித்திரமாய் ஒளிரையிலே

சிங்காரி எமைவிட்டு போயிங்கு பல திங்கள் ஓடினவோ!
பாலகன் உன் பிள்ளை வளந்திங்கு பல்கலை போகையிலே
உன் கண்கள் பார்த்திங்கு உளம் குளிர நீ இல்லை!
உன் பிள்ளை மனமெல்லாம் உன் உருவே ஒளியாக
உடல் கொண்டு வாழ்கின்றான் அவன் உயிரெல்லாம் உன்னோடு!
உரு கொண்ட வாழ்வுதனை முடித்திங்கு நீ சென்றாய்
அவ்வுலகில் நின்மதியாய் உறங்கிடுவாய் சிவனடியில்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிள்ளைகள், சகோதரிகள்,
சகோதரன், குடும்பத்தினர்

(16938)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE OPEN UNIVERSITY OF SRILANKA



## JAFFNA REGIONAL CENTRE



**இலங்கை திறந்த பல்கலைக்கழக, யாழ்ப்பாணம் பிராந்திய நிலையத்தினால் பின்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.**

1. முகாமைத்துவ கற்கைகள் பீடம்
- முகாமைத்துவ சிறப்பு இளமாணிப்பட்டம்
- கணக்கீடு மற்றும் நிதியியல் முகாமைத்துவ சிறப்பு இளமாணிப்பட்டம்
- மனிதவள முகாமைத்துவ சிறப்பு இளமாணிப்பட்டம்
- சந்தைப்படுத்தல் முகாமைத்துவ சிறப்பு இளமாணிப்பட்டம்

2. தமிழ் மற்றும் தமிழ்மொழிக் கற்பித்தலில் சிறப்புக்கலைமாணி (BA in Hons in Tamil and Tamil Language Teaching)
3. மென்பொறியியல் இளமாணிப்பட்டக்கற்கைநெறி (Bachelor of Software Engineering Honours)
4. மனிதவள முகாமைத்துவ குறுகியகால கற்கைநெறி (Short Course in Human Resource Management)
5. தொடர்பாடலுக்கான ஆங்கிலம் (Short Course in Listening & Speech in English)

**உங்களின் உயர் கல்விக்கான கனவினை நனவாக்க எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள்**

மேலதிக தகவலுக்கு,
யாழ்ப்பாண பிராந்திய நிலையம்,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Telephone: +94-212223374 Hot Line: +94-706215112
Fax: +94-212221810 E-mail: adjaf@ou.ac.lk

அனுசரணை: கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையமும் 60 ஆவது ஆண்டின் நினைவு

Registrar, The Open University of SriLanka
Nawala, Nugegoda.

(சி-7222)

# TECHNA
Technical Institute

## A/L 2022 பிரிவு

தொழினுட்பப்பிரிவு
Smart Thinking Leads To Innovate
077 170 3549
3ஆம் மாடி,
உ வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.

(17009)

பொறியியல் தொழினுட்பவியல் | எமது மாணவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம் | உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்



- ஜெ.சோபிகன் (2A B) (மாவட்ட நிலை - 06)
- பு.தருஜிகன் (ABC) (மாவட்ட நிலை - 18)
- ர.லிக்சன்ராஜ் (3B) (மாவட்ட நிலை - 19)
- க.திலீப் (B 2C) (மாவட்ட நிலை - 20)
- யோ. சங்கோதயன் (A 2C) (மாவட்ட நிலை - 21)
- த.இசைச்செல்வி (3B) (மாவட்ட நிலை - 06)
- ச.ஜினித்தா (2 BC) (மாவட்ட நிலை - 10)
- ஜோ.வெ.ஜோசியா (2B C) (மாவட்ட நிலை - 22)
- ர.தஜீலன் (B 2C) (மாவட்ட நிலை - 25)
- அ.கஜப்பிரியன் (B 2C) (மாவட்ட நிலை - 28)
- மு.மயூரிகன் (B 2C) (மாவட்ட நிலை - 29)
- ம.திவாகர் (B 2C) (மாவட்ட நிலை - 30)
- க.சந்தியா (2B C) (மாவட்ட நிலை - 15)
- ப.தேனுஜா (B 2C) (மாவட்ட நிலை - 18)
- ச.கஜநீபன் (B 2C) (மாவட்ட நிலை - 33)
- சி.பிரதீபா (B 2C) (மாவட்ட நிலை - 43)
- அ.திசாகன் (B 2C) (மாவட்ட நிலை - 46)
- ஜெ.சரண்ஞா (3C) (மாவட்ட நிலை - 47)
- சு.கஸ்தூரி (2C S) (மாவட்ட நிலை - 55)
- ஜெ.சாமந்தி (B 2C) (மாவட்ட நிலை - 26)
- ஜெ. ஜெசிக்கா (BCS) (மாவட்ட நிலை - 27)
- மு.சவின்சன் (2C S) (மாவட்ட நிலை - 56)
- அ.ஜோ.நிருசன் (3C) (மாவட்ட நிலை - 10)
- வ.மு.முன்சிவ் (B2C) (மாவட்ட நிலை - 14)
- மொ.ஐ.மொ.இன்சாவ் (B2C) (மாவட்ட நிலை - 28)
- ப.ஃ.மொ.முன்சிவ் (BCS) (மாவட்ட நிலை - 36)
- க.சுமித்திரா (BCS) (மாவட்ட நிலை - 31)
- த.பிரவீனா (2C S (மாவட்ட நிலை - 36)

**A/L 2023 Repeat Batch**
ஆரம்பம் - 11.09.2023
திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு

**A/L 2025, 2024**
விசேட பிரிவுகள் நடைபெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓபன் டென்னிஸ் இறுதிப்போட்டியில் மெத்வதேவ்-ஜோகோவிச் மோதல்



கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடர் நியூயோர்க் நகரில் நடந்து வருகிறது.

ஆண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் அரையிறுதி போட்டியில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச், அமெரிக்க இளம்வீரர் பென் ஷெல்டன் ஆகியோர் மோதினார். இதில் ஜோகோவிச் 6-3, 6-2, 7-6 (74) என்ற செட் கணக்கில் வென்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்தார்.

இந்நிலையில் 2 ஆவது அரையிறுதி போட்டி நேற்று நடைபெற்றது. இதில் கார்லஸ் அல்காரஸ் - மெத்வதேவ் ஆகியோர் மோதினர்.

இந்த ஆட்டத்தில் முதல் செட்டை 7-6 (7-3) என போராடி கைப்பற்றிய மெத்வ தேவ் அடுத்த செட்டை 6-1 என எளிதில் கைப்பற்றி அசத்தினார்.

இதையடுத்து 3 ஆவது செட்டை 6-3 என அல்காரஸ் கைப்பற்றினார்.

இதையடுத்து 4 ஆவது செட்டில் தனது அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய மெத்வதேவ் 6-3 என அல்காரஸை வீழ்த்தினார்.

இறுதியில் 7-6 (7-3) , 6-1, 3-6, 6-3 என்ற செட் கணக்கில் அல்காரஸை வீழ்த்தி மெத்வதேவ் இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.

இதன் மூலம் அமெரிக்க ஓபன் தொடரில் 3ஆவது முறையாக இவர் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார்.



இறுதிப்போட்டியில் மெத்வதேவ் - ஜோகோவிச்மோதல் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

# இந்த தடவை மிஸ் ஆகாது

## பாபர் அசாம்




ஆசிய கிண்ண தொடர் இலங்கை மற்றும் பாகிஸ்தானில் நடைபெற்று வருகிறது. ஆப்கானிஸ்தான் மற்றும் நேபாளம் அணிகள் வெளியேறிய நிலையில் இந்தியா, பாகிஸ்தான், வங்காளதேசம், இலங்கை அணிகள் சுப்பர் 4 சுற்றில் மோதி வருகிறது.

இன்று இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் மோதுகிறது. இப்போட்டியில் இந்தியாவை வெல்ல அதிக வாய்ப்பு உள்ளதாக பாகிஸ்தான் அணியின் கப்டன் பாபர் அசாம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது,

கடந்த இரண்டு மாதங்களாக நாங்கள் இலங்கையில் விளையாடி வருகிறோம். நாங்கள் டெஸ்ட் விளையாடினோம். ஆப்கானிஸ்தானுக்கு எதிராக ஒரு தொடரில் விளையாடினோம். அதன் பிறகு எல்.பி.எல் விளையாடி உள்ளோம். தொடர்ச்சியாக இங்கு விளையாடி வருவதால் இந்தியாவை நாங்கள் வெல்ல அதிக வாய்ப்பு இருப்பதாக கருதுகிறேன்.

மிடில் ஓவர்களில் சொதப்பினாலும் போட்டியை நன்றாக முடிப்பதை நீங்கள் காணலாம். எங்கள் வேகப்பந்து வீச்சாளர்கள் இறுதியில் சிறப்பாக செயற்படுகின்றனர். இது ஒரு அணியின் கூட்டு முயற்சி.

போட்டியில் யாராவது தோல்வியுற்றால், மற்றொரு பந்து வீச்சாளர் அதை சரி செய்கிறார்கள். இன்று வானிலை தெளிவாக இருக்கும் என்று நம்புகிறேன் எனத் தெரிவித்தார். (6)

# மரண அறிவித்தல்

பிறப்பு 1947 . 10 . 20



இறப்பு 2023 . 09 . 09

## நடேசன் பராசக்தி

யாழ்/ நெடுந்தீவு - கிழக்கினைப் பிறப்பிடமாகவும் இல.144 பாண்டியன்குளத்தை வதிவிடமாகவும் கொண்ட நடேசன் பராசக்தி அவர்கள் 09.09.2023 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியினரின் மகளும் ஆறுமுகம் - பார்வதி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற நடேசனின் அன்பு மனைவியும் நடராசா(காலஞ்சென்ற), தில்லையம்பலம்(காலஞ்சென்ற), நாகம்மா, சுப்பிரமணியம் (காலஞ்சென்ற) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் நடேஸ்வரி (காலஞ்சென்ற), சிவபாக்கியம்(காலஞ்சென்ற), வைத்திலிங்கம் (காலஞ்சென்ற), தவமணி(காலஞ்சென்ற), தனலட்சுமி, தியாகராசா ஆகியோரின் மைத்துனியும், மகிழ்மலர், நவனீதராசா, மஞ்சுளா (காலஞ்சென்ற), றஜனி, ஜெகதீஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும் கிருஸ்ணகுமார், கோகிலராணி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சஞ்சீபன் லோஜினி, அருளினி, திவாகரன், சபித்தா, சுசி, றக்‌ஷனா(காலஞ்சென்ற) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

2023.09.10 ஞாயிற்றுக்கிழமை பி.ப2.00 மணிக்கு அன்னாரின் பூதவுடல் பாலியாறு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்பு: 077 167 7681 (c-7225)

தகவல்: குடும்பத்தினர்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 12 . 12 . 1971



ஆண்டவன் அடியில் 14 . 08 . 2023

கடந்த 14.08.2023 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் சங்கரப்பிள்ளை சிவகுமார்

(அபிவிருத்தி உத்தியோகத்தர் - கடற்றொழில் பரிசோதகர்(பதில்) அகில இலங்கை சமாதான நீதவான், மொழி பெயர்ப்பாளர் தமிழ் - சிங்களம், சிங்களம் - தமிழ், சிங்கள போதனாசிரியர் - அரச கருமமொழிகள் திணைக்களம்)


அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 11.09.2023 திங்கட்கிழமை அதி காலை 5.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று அஸ்தி கரைக்கப்படும். 13.09.2023 புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியையிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்வதுடன் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

ஆனைப்பந்தி, உடுப்பிட்டி. (C-7224) குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி சீனா விஜயம்



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஒக்டோபர் 16, 17 மற்றும் 18 ஆம் திகதிகளில் சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றினை மேற்கொள்ள வுள்ளார்.

குறித்த விஜயத்தின் போது சீன ஜனாதிபதி உள்ளிட்ட சீனத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் இலங்கை தனது இருதரப்பு கடன்களை மறுசீரமைப்பதில் சீனாவுடன் தொடர்ந்து ஈடுபட்டுள்ள நிலையில் இந்த விஜயம் அமையவுள்ளது.

கடந்த வருடம் ஜனாதிபதி பதவியேற்ற பின்னர் சீனாவிற்கு மேற்கொண்டுள்ள உத்தியோகபூர்வ விஜயம் இதுவே முதல் தடவையாகும். (நி)

# கோழி இறைச்சியின் விலை குறைவடையும்

## கால்நடை உற்பத்தியாளர் சங்க தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

கோழி இறைச்சியின் விலை குறைப்பு தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்பட்டதாக கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி தற்போது ஆயிரத்து 250 ரூபாய்க்கு விற்கப்படும் ஒரு கிலோகிராம் கோழி இறைச்சி ஆயிரத்து 100 ரூபாய்க்கு விற்பனை செய்ய வாய்ப்பு உள்ளதாக அதன் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்துள்ளார்.இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வர்த்தக அமைச்சருடன் கலந்துரையாடினோம். அதன்படி உற்பத்தி செலவை கணக்கிட்டு கொடுத்துள்ளோம்.

கலந்துரையாடலுக்கு பின் சில உடன்பாடுகளுக்கு வந்துள்ளோம். தற்போது நாட்டில் இறைச்சி தட்டுப்பாடு இல்லை.சிறு மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்கள் அதிக பட்ச திறனில் உற்பத்தி செய்கின்றனர். அதன்படி எதிர்வரும் மாதங்களில் தட்டுப்பாடு ஏற்படாது.டிசெம்பர் மாதத்திற்குள் உற்பத்தி திறன் அதிகரித்து உபரியாக இருக்கும் என நம்புகிறோம்.

அதன்படி விலை மேலும் குறையும். எங்களுக்கு உற்பத்தியை தொடர அரசு அனைத்து சலுகைகளையும் வழங்கியுள்ளது. இறைச்சி விலை 1,100 ரூபாவை எட்டும் என நம்புகிறோம். இதேவேளை, சோளம் தான் பெரிய பிரச்சினையாக உள்ளது.

இலங்கைக்கு கொண்டு வந்தால் சோளத்தை முழுமையாக உணவுக்கு பயன்படுத்தலாம். அப்போது உற்பத்தி செலவை குறைக்கலாம் என மேலும் தெரிவித்தார். (நி)

# வெளிநாட்டு பணியாளர்களால் கிடைக்கும் நிதி அதிகரிப்பு

## மத்திய வங்கி தரவுகள் தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த ஓகஸ்ட் மாதம் வெளிநாட்டு பணியாளர்களின் பண அனுப்பல் 499.2 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரிப்பை பதிவு செய்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் புதிய தரவுகள் தெரிவித்துள்ளன.

மேலும் இந்த ஆண்டின் ஜனவரி மாதம் முதல் ஓகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதியில் மூவாயிரத்து 862.7 மில்லியன் அமெரிக்க டொலர் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளது.


2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டின் முதல் 8 மாதங்களில் இந்த அதிகரிப்பு 74.4 சதவீதமாக பதிவாகியுள்ளது. (நி)




## நல்லருள் புரியும் நல்லையம்பதியே

இன்னமும் பாராமுகம் ஏனோ?-இந்த
ஏழை வருந்துவதில் உனக்கும் இன்பம் தானோ?
அன்னை கொடுந்துயரில் அழுதிடவும் -உன்
அருளை வேண்டி தினம்
நின்னடி தொழுதிடவும்
இன்னருள் மழை பொழியும்
நல்லையிலே- அன்பர்
ஏத்தி புகழ் பாடி
உலவும் உன் எல்லையிலே
இன்னல்கள் அகன்றிடவே கண்பாராய்- நம்
ஈழத்தமிழ் மண்ணின்
மிடிமைகளை தீராய்.
பொன்பொருள் செல்வங்கள்
நிலையில்லை- உனை
போற்றி பணிவதனை
போலவோர் கலையில்லை
விண்ணொளி பேரண்ட பெருநிதியே-நம்
வினைகளை தீர்த்தருள்வாய் குருவே
நல்லையம் பதியே ஆறுமுகனே

வளலாய் ரஞ்சன்



# இராசிபலன்

10.09.2023
ஆவணி 24, ஞாயிற்றுக்கிழமை
ஏகாதசி பின்னிரவு 12.04 மணிவரை

புனர் பூசம் முன்னிரவு 8.31 மணிவரை
சுபநேரம் -9.03-10.33 மணிவரை
இராகுகாலம்-4.33-6.03 மணிவரை

ஏகாதசி விரதம்
சந்திராஷ்டமம்-
கேட்டை,மூலம்.

**வளவன்**




உற்றார் உறவினர்களின் வருகையுண்டு, பிள்ளைகளின் கல்வி நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள்.




வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, கற்பனை மிகுதியான நாள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள்.




பிரியமான சிலரின் சந்திப்புகள் இடம் பெறலாம்,எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.




விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், நிம்மதிக்காக வழிபாட்டை மேற்கொள்வீர்கள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.




தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், உடல் நலனில் கொஞ்சம் அக்கறை தேவை, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வழிபாடு குதூகலம் தரும்.




உறவினர்களைக் காண பயணமொன்றை மேற்கொள்வீர்கள், மாற்றங்களினால் ஏற்றம் காணும் நாள், தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.




எடுத்த காரியங்களில் வெற்றி பெற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், சுற்றத்தார்கள் வருகையுண்டு, பயணங்கள் செல்லும் எண்ணம் உருவாகும்.




தெய்வீக சிந்தனை மேலோங்கும்,குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், கௌரவமான நாள்.




சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் மேலோங்கும்.




சகோதர வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறலாம், செல்வ நிலை உயரும் நாள், விரதங்களில் நம்பிக்கை கூடும், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.




புதிய செயற்பாடுகளை காலைப் பொழுதே நிறைவேற்றுவது நல்லது, உடல் நலனில் கவனம் செலுத்தும் எண்ணம் உருவாகும், எதையும் சிந்தித்து செயற்பட வேண்டிய நாள்.




தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

காலத்தை தள்ளிப்போடாதே தாமதங்கள் அபாயகரமானவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் வரிக்கொள்கை விஸ்தரிப்பால் கல்வித்துறை மீது பாரிய அடி

## யாழ்.பல்கலைக்கழக ஆசிரிய சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

உள்நாட்டு கடன் சீரமைப்பு என்ற பெயரில் பல்கலைக்கழக ஆசிரியர்கள், ஊழியர்கள் உள்ளடங்கலாக அனைத்து உழைக்கும் மக்களின் சேமிப்பாக ஈ.பி.எப் கணக்குகளிலும் ஏனைய ஓய்வூதிய நிதியங்களிலும் இருக்கும் பணத்தினை கொள்ளையிடும் அரசின் முயற்சி கல்வீதி துறையின் மீதும் நாட்டின் ஒட்டுமொத்த உழைக்கும் மக்களின் மீதும் விழுந்த ஒரு பாரிய அடியாகும் என யாழ். பல்கலைக்கழக ஆசிரிய சங்கம் அறிக்கை விடுத்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை வெளியிட்ட ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

சர்வதேச நாணய நிதியத்தின் அனுசரணைக்கு இணங்க அரசினால் முன்னெடுக்கப்படும் பொருளாதார நிகழ்ச்சித் திட்டங்கள் கல்வித் துறைக்கும் ஏனைய துறைகளுக்கும் ஒரு நெருக்கடியான சூழலை தோற்றுவித்துள்ளது.

அரச பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் தொகையிலே அண்மை ஆறு வருடங்களிலே 50 வீதத்தால் அதிகரித்து இருப்பினும் கல்விக்கான அரசின் முதலீட்டின் அளவு 50 வீதத்தினால் குறைவடைந்திருக்கிறது.

மேலும் அரசின் வரி விதிப்புக் கொள்கைகள் காரணமாகவும் நாணய மாற்று வீதத்தில் ஏற்பட்டு இருக்கும் மாற்றத்தின் விளைவாக உயர் கல்விக்குச் செல்லும் ஆசிரியர்களுக்கான பிணைப் பணத்தில் ஏற்பட்டுள்ள பாரிய அதிகரிப்பு மற்றும் அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவினங்கள் காரணமாகவும் அரச பல்கலைக்கழகங்களிலே கற்பிக்கும் விரிவுரையாளர்களது தமது பல்கலைக்கழக பதவியினை துறந்து நாட்டை விட்டு அதிக எண்ணிக்கையில் வெளியேறுகின்றனர்.

அத்துடன் புதிய விரிவுரையாளர்களை உள்ளீர்ப்பதற்கு பல தடைகளும் கட்டுப்பாடுகளும் அமுலிலே உள்ளமையால் பல்கலைக்கழகங்களின் நிலைமை மோசமடைந்து செல்லுகிறது.

இலவசக் கல்வித்துறையின் மீட்சிக்காக எதிர்வரும் வரவு-செலவுத்திட்டத்திலே கல்விக்கென ஒதுக்கப்படும் தொகையிலே அதிகரிப்புச் செய்ய வேண்டும்.

அதேபோல பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டுக் கொண்டு இருக்கும் மக்களின் முன்னேற்றத்திற்கான நலன்புரித்திட்டங்களுக்கு அரசு கூடியளவு நிதியினை ஒதுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் அனைத்து தரப்பினரின் ஆதரவு அவசியம் என குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)



முல்லைத்தீவு மாவட்டம் மூங்கிலாறு வாழ் பெண் படைப்பாளி வி.அபிவர்ணாவின் "வில்லோடு வா வெண்ணிலா" கவிதை நூலின் வெளியீட்டு விழா கடந்த 30 ஆம் திகதி மூங்கிலாறு கிராம அபிவிருத்திச் சங்க வளாகத்தில் நடைபெற்றது.
(படம்-சிவசாந்தன்)

# நல்லூர் உற்சவ கால தெய்வீக இசை அரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். இளங்கலைஞர் மன்றத்தால் நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நடத்தப்படும் தெய்வீக இசை அரங்கு நிகழ்வு நாளை 11 ஆம் திகதி மாலை 6.45 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் நல்லூர் சாரங்கம் இசை மன்றத்தால் குழு இசை நடத்தப்படவுள்ளது. வாசஸ்பதி ரஜீந்திரனின் நெறியாள்கையில் வயலின்- கெ.வேலதீபன். மிருதங்கம்-ந.வசந் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து 7.15 மணிக்கு இடம்பெறவுள்ள இசை அரங்கு நிகழ்வில் பாட்டு- இசைஅமுதன். ஶ்ரீசுலக்சன். ஶ்ரீசுருதி. கீபோட்- கே. ஶ்ரீகுகன். ஆர்மோனியம்- ந.செல்வச்சந்திரன். பேஸ்கிற்றார்- அ.சதீஸ். மிருதங்கம்- க.இசைநிலவன். தபேலா-பா.கபிலன். ஒக்ரபாட்- எஸ்.ராஜா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (நி)

# வாகன இலக்கத் தகடுகள் காட்சிப்படுத்தல்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள தலைமை அலுவலகத்திலிருந்து கடந்த 2023.08.23 ஆம் திகதி யாழ். மாவட்டச் செயலக அலுவலகத்திற்குக் கிடைக்கப் பெற்ற வாகன இலக்கத் தகடுகளின் பட்டியல், யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திலும் பொது மக்களின் பார்வைக்காக அறிவிப்புப் பலகையில் காட்சிப்ப டுத்தப்பட்டுள்ளது. மேலும் மாவட்டச் செயலக இணையத் தளத்திலும் பார்வையிடலாம்.

புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப் பதிவுப்புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும் வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் என்பவற்றையும், யாழ்.மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் குறிப்பிடப்பட்ட திகதியில் குறித்த நேரத்திற்கு சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத் தகடுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என யாழ். மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்துத்திணைக்கள உதவிஆணையாளர் தெரிவித்துள்ளார். (6)

# நயினை-நல்லூர் திருத்தல பஜனைப் பாதயாத்திரை

(யாழ்ப்பாணம்)

நயினை-நல்லூர் திருத்தலப் பஜனைப் பாதயாத்திரையின் 59 ஆவது ஆண்டு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை நயினை ஶ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் நடைபெறும் பூசை வழிபாட்டையடுத்து வேல் எடுத்துக் கொண்டு மு.ப 10 மணிக்கு குறித்த பாதயாத்திரை ஆரம்பமாகும்.

அதனைத் தொடர்ந்து குறிகட்டுவான். புங்குடுதீவு. வேலணை. மண்கும்பான். அல்லைப்பிட்டி. மண்டைதீவு. பண்ணை. யாழ்ப்பாணம். வில்லூன்றி.கந்தர் மடம் வழியாக எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை தேர்த் திருவிழாவன்று அதிகாலை நல்லூரான் திருத்தலத்தைச் சென்றடைந்து திருத்தேரின் பின் பஜனை வேல் அர்ச்சனையுடன் நிறைவுறும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (6)


**சமையலாளர் தேவை**

இந்திய உணவு வகைகள்
செய்யக்கூடியவர்கள்
(தோசை,பூரி, சப்பாத்தி)
**சமையல் உதவியாளர்கள்**
சமையல் உதவியாளர்/மரக்கறி வெட்டுபவர்கள் சமையல் கூட சுத்திகரிப்பாளர்.
**075 068 3810** (17014)

**அறை வாடகைக்கு**

அறை வாடகைக்கு, வெள்ளவத்தையில் தனிப்பாதையுடன் Apart ment இல் அறை வாடகைக்கு உண்டு.மாத வாடகை 30000. 00 Electricity & Water bill அடங்கலாக சமையலறை, parking வசதி இல்லை.
**070 178 8354** (2122)

**கண்ணீர் அஞ்சலி**



எமது கல்லூரியின் ஆசிரியர்
திருமதி.பாலதர்சினி தியாகராஜா
அவர்களின் அன்புத் தந்தையார்
அமரர்.
**ஆறுமுகம் சந்திரபோஸ்**
அவர்கள் அமரத்துவம் அடைந்துவிட்டார்.
அன்னாரது பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை
தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
(17012)
கல்லூரிச் சமூகம், யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

சற்குருபாதம் துணை
**6 ஆம் ஆண்டு குருபூசை, சைவசமய தீட்சை வழங்கல்**
**ஶ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள்**



கிளிநொச்சி,ஜெயந்திநகர் மகாதேவ ஆச்சிரம இரண்டாம் குருபீடாதிபதி ஶ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள் குருபூசை நடைபெற திருவருள் கைகூடியுள்ளது.

**காலம்–15.09.2023 வெள்ளிக்கிழமை**
**நேரம்– காலை 10.30 மணி**
**இடம்– ஆச்சிரம மண்டபம்**

**அங்கத்தவர்கள்யாபேரும்,
சிவனடியார்களும் பங்குபற்றி
குருவருளை பெற்றுக் கொள்ள
அன்புடன் அழைக்கின்றோம்.**

சைவசமய தீட்சை வழங்குதல்
**காலம்– 17.09.2023 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம்– காலை 8 மணி முதல்**
**இடம்– ஆச்சிரம மண்டபம்**

பங்குபற்ற விரும்புபவர்கள் தங்கள் பெயர், தொலைபேசி இலக்கம்
என்பவற்றை ஆச்சிரம உபசெயலாளருடன் தொலைபேசி இலக்கம்
077 431 9281 ஊடாக அல்லது நேரில் 16.9.2023 முன்
பதிவுகளை மேற் கொள்ளவும்.
அன்பே சிவம். (17015)

அறங்காவலர், நிர்வாக உறுப்பினர்கள், மகாதேவ ஆச்சிரமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 406
Viber 076 636 3378



# அந்த ஆதாரம் பொய் இந்த ஆதாரம் மெய்

**“ சனல் 4 வெளியிட்ட உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பான காணொளி கண்ணுக்குத் தெரிந்தவர்களுக்கு வன்னிப்பெரு நிலப்பரப்பில் நடந்த இன அழிப்பு தொடர்பான காணொளி தெரியாமல் போனது ஏன்? ”**

பாகுபலி திரைப்படத்தில் அரச முடிக்குரியவர்களான பாகுபலி மற்றும் பல்வாள் தேவன் ஆகியோரில் யாருக்கு முடி சூட்டுவது என்பதில் குழப்பம் ஏற்படவே காளகேயப் படைகளும் படை எடுத்து வர; காளகேயப் படைகளை வென்று காளகேயத் தலைவனின் சிரத்தை யார் கொய்கிறார்களோ அவர்களுக்கே நாட்டின் மன்னனாக முடி சூட்டப்படும் என சிவகாமி அம்மையார் அறிவிக்கின்றார்.

பாகுபலி, பல்வாள் தேவன் ஆகிய இருவரும் போருக்குத் தயாராகிறார்கள். காளகேய படைகள் வானரங்கள் போல மூர்க்கத்துடன் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள்.

படைகள் நேருக்கு நேர் மோதிக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் காளகேயத் தலைவன் நாட்டு மக்களை பணயக் கைதிகளாக வைத்துக் கொண்டு தாக்குதலை மேற்கொண்ட வண்ணம் இருந்தான்.

காளகேயப் படைகள் மீது தாக்குதல் நடத்தினால் முதலில் மடிவது நாட்டு மக்கள் என்பதை பாகுபலி அறிந்து அதற்கேற்றாற் போல் போரிடுகிறான். ஆனால் முடியாசை கொண்ட பல்வாள் தேவன் தான் நாட்டு மக்களையே அழித்து முடிசூட முற்படுகிறான்.

விளைவு தன் நாட்டு மக்களை காத்து, எதிரிகளை அழித்த பாகுபலி பட்டத்து இளவரசனாக சிவகாமியால் முடிசூட்டப் படுகிறான்.

குறித்த பாகுபலி திரைப் படத்துக்கும் எமது நாட்டில் நடந்த ஈஸ்டர் தாக்குதல் நிகழ் விற்கும் ஒற்றுமை இருக்கிறது.

ஆம் பிரித்தானியாவை தளமாகக் கொண்டியங்கும் சனல் 4 செய்தி நிலையம் கடந்த செவ்வாய்க்கிழமை ஒரு காணொளியை வெளியிட்டிருந்தது. அதில் ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரிகள் யார் யார் என் பது மிகத் தெளிவாக விபரித்திருந்தது.


ஆட்சி அதிகாரங்களைக் கைப்பற்றுவதற்காக தமது சொந்த நாட்டு மக்களையே ராஜபக்‌ஷவினர் குண்டு வைத்துக் கொன்றார்கள் என ஆணித்தரமாக கூறியிருக்கிறது சனல்4.

ராஜபக்‌ஷக்கள் மீண்டும் ஆட்சி அதிகாரங்களைக் கைப்பற்ற வேண்டுமாயின் நாட்டில் ஒரு குழப்ப நிலை தோன்ற வேண்டும்.

அதற்காக தமிழ் மக்கள் விடுலைப் புலிகளின் தலைவர் பிள்ளையான் மூலமாக உயிர்த்த ஞாயிறு அன்று பல இடங்களில் மனித குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டு தமது சொந்த நாட்டு மக்களையே கொன்றார்கள் ராஜபக்‌ஷக்கள் என்றவாறு குறித்த காணொளி நீண்டு செல்கிறது.

நாட்டில் பயங்கரவாதத்தை அழித்து எமக்கு விடிவுதந்த விடிவெள்ளி ராஜபக்‌ஷக்கள் என சிங்கள மக்கள் அவர்களை தலையில் தூக்கி வைத்து கொண்டாடிய நிலையில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற தமது மக்களையே கொன்று அந்தக் குருதியினூடே வெற்றிக் களிப்பை கொண்டாடினார்கள் என்ற செய்தி கண்டிப்பாக சிங்கள மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டதையும் பல போர்குற்ற மீறல்கள் அரச படைகளினால் மேற்கொள்ளப்பட்டதையும் ஆதாரங்களுடன் சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்டபோது அதை பொய்யான காணொளி, புனைக்கப்பட்ட காணொளி என கண்டனம் தெரிவித்த பல சிங்கள அரசியல் தலைவர்கள்



தற்போதைய சனல் 4 காணொளியை சரியென்றும் ஈஸ்டர் தாக்குதலுக்கு சர்வதேச விசாரணை தேவை எனவும் கூறுவது வியப்பிற்குரியதாயும் வேதனை தருவதாயும் அமைந்துள்ளது.

வன்னி பெருநிலப் பரப்பில் நடந்த கொடுமைகளைப் பார்த்தால் கல்நெஞ்சக் காரரும் கரைந்து விடுவார். அந்தளவிற்கு பல கொடுமைகளை குறித்த காணொளியில் சனல் 4 வெளியிட்டிருந்தது.

அதை ஏற்றுக்கொள்ளா மல், கண்டும் காணாததுமாய் இருந்தவர்கள் இப் போது ராஜபக்‌ஷக்களுக்கு எதிராக சர்வதேச விசாரணை தேவை என்பதற்குள் இருக்கும் இனமுரணை என்னவென்று கூறிவிட முடியும்.

உயிர்த்த ஞாயிறு தொடர்பான சனல் 4 காணொளியைப் பார்த்து நாடே கொந்தளிக்கும் நிலையில் இருக்கும் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு விடயத்தைத் தெரிவித்திருக்கின்றார்.

அதாவது உயிர்த்த ஞாயிறு தொடர்பாக சனல் 4 காணொளி ஜெனிவாவுக் கான நாடகம் எனவும் அதனால் எவரும் இது விடயத்தில் அவசரப்படத் தேவையில்லை எனவும் கூறியிருக்கின்றார்.

சனல் 4 காணொளியை ஜெனிவா அமர்வுக்கான நாடகம் என்பதற்குள் தமிழினத்துக்கு ஆதரவாக சனல் 4 செயற்படுகிறது எனும் பொருள் மறைந்திருப்பதை உணர முடிகிறது.

என்ன செய்வது ஆட்சி அதிகார வெறிகொண்டு தனது சொந்த நாட்டு மக்களையே கொலை செய்ததாய் எங்கோ இருக்கும் ஒரு செய்தி நிறுவனம் செய்தி வெளியிடுகி றது.

அதை நாடகம் எனக்கூறும் ஆட்சியாளர்களின் சிந்தனையில் தமிழினத்துக்கு எதிரானதாய் இருப்பதையே காட்டி நிற்கிறது.

சனல் 4 வெளியிட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஆதாரங்களுக்கு சர்வதேச விசாரணை தேவை என வலியுறுத்துபவர்களின் கண்களுக்கு வன்னிப்பெருநிலப் பரப்பில் நடந்த கொடுமைகள் தொடர்பான ஆதாரங்கள் தெரியாமல் போவது ஏன் என்ற கேள்வி தமிழ் மக்களிடம் உண்டு. இதற்கு பேரினவாத அரசியல் தலைவர்கள் பதில் கூற வேண்டும்.

-அபிமன்யு-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். முல்லைத்தீவு கல்விளான்குளம் மகாவித்தியாலய அதிபர் இராசேந்திரம் நிக்சன் அவர்கள் காலமான செய்தி அறிந்து மிகுந்த வேதனையடைகின்றோம். பாடசாலையின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட அவரின் இழப்பு ஈடு செய்ய முடியாதது. அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

அதனைத் தொடர்ந்து வாத்தியார் வைத்திலிங்கம் எழுந்தார்.

நீர்வேலி ஐடியல் கல்வி நிறுவனத்தின் ஸ்தாபகர் சேவியர் செல்லத்துரை அவர்கள் கனடாவில் காலமானார் என்ற செய்தி அறிந்து மிகுந்த வேதனையடைகின்றோம். அவரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக்கூற, மீண்டும் அனைவரும் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் சிறிது நேரம் மௌனம் நிலவியது. மௌனத்தைக் கலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** அது சரி யாழ்.போதனா வைத்தியசாலையில் எட்டு வயதுச் சிறுமியின் கை அகற்றப்பட்ட சம்பவம் தொடர்பில வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் விசாரணை நடத்தும் எண்டு அறிவிச்சவியளல்லோ. ஏதும் நடந்ததோ.

**சாத்திரியார்:-** ஆளுநர் அலுவலகத்திற்கு மத விவகாரத்தைக் கவனிக்கவே நேரம் போதாது. பிறகு என்னெண்டு விசாரணை நடத்துறது.

**மூப்பர்:-** என்ன சாத்திரியார் சொல்லுறியள்.

**சாத்திரியார்:-** மூப்பர் அண்ணே! அதற்கான நேரம் வரும் போது விளக்கமாகச் சொல்லுறன். ஆனால்



## முறைப்பாடுகளைப் பதிவு செய்ய ஆளுநர் அலுவலகத்தில் ஏற்பாடு தேவை

இப்ப வட மாகாணத்தில சைவ சமயத்தை எப்படி ஓரங்கட்டுறது எண்ட ஆய்வில தான் நேரம் கடப்பதாகக் கேள்வி.

**மூப்பர்:-** எனக்கெண்டால் நீங்கள் சொல்லுறது இன்னமும் புரியல்ல.

**சாத்திரியார்:-** வட மாகாணத்தில நடக்கிற ஒரு நிகழ்வில முக்கிய விருந்தினர்களாக சைவ சமயம் சார்ந்த அதிகாரிகள் இருக்கக்கூடாது என்பதில சம்பந்தப்பட்டவர்கள் மிகத் தீவிரமாக இருந்ததாக உயர் அதிகாரி ஒருவர் எனக்குச் சொன்னவர்.

அப்படி சைவ சமயம் சார்ந்த அதிகாரியொருவரை விருந்தினராகப் போட வேண்டிய சூழ்நிலை வந்தால், அந்த இடத்திற்கு உயர் பதவியில இருக்கிற சிங்கள அதிகாரியைப் போட வேணும் எண்டும் தீர்மானமாம்.

**பண்டிதர்:-** சரி... சரி... ஏதோ நடந்தாகட்டும். ஒரு காலத்தில இலங்கைக்கு வந்த அந்நியர்கள் சைவக் கோயில்களை இடிச்சு அழிச்சினம். வாழையிலையில உணவு சாப்பிடுகிறவர்களைத் தண்டிச்சினம்.

ஆனால் இப்ப எங்கட ஆட்கள் புலம்பெயர்ந்து வெளிநாடுகளுக்குப் போய் அங்க சைவக் கோயில்களைக் கட்டி, தேர் ஓடுகினம். தேங்காய் உடைக்கினம். வாழை இலையில சாப்பாடு பரிமாறுகினம்.

இதில ஆச்சரியம் என்னவெண்டால், பிரிட்டன் நாட்டு வெள்ளைக்காரர்களும் தேர் வடம் பிடித்து இழுக்கிறதோட, வாழை இலையிலும் சாப்பிடுகினம் எண்டால் பாருங்களன்.

நாங்கள் நினைத்து எந்தச் சமயத்தையும் ஓரங்கட்ட முடியாது. இறைவன் என்ன நினைக்கிறானோ அதுதான் நடக்கும்.

**சிறாப்பர்:-** உண்மைதான். நல்லூர்க் கந்தசுவாமியாரிட்ட நிறைய வெள்ளைக்காரர்கள் வந்து தரிசிக்கினம். அப்படி வந்து நல்லூர் முருகனைத் தரிசிப்பவர்களைப் பார்க்கிறன். அவர்களின்ர முகத்தில ஒரு அதிர்ச்சி தெரியுது, ஏக்கம் தெரியுது. கையெடுத்துக் கும்பிடுகினம். அவர்களைப் பார்க்கிறபோது; இவர்கள் தான் முற்பிறப்பில நல்லூர் முருகன் கோயிலைத் தரைமட்டமாக உடைத்து அதில தேவாலயம் கட்டினவியளோ எண்டு நினைக்கத் தோன்றும்.

அந்தளவுக்கு நல்லூர் முருகன் ஆலயத்திற்கு வருகிற வெள்ளைக்காரர்களிட்ட முற்பிறப்பின்ர நினைவுகள் அலைமோதுகிறதைப் பார்க்க முடியுது.

இவ்வாறு சிறாப்பர் கூறியதும் ஓ! மாவீரன் என்ற திரைப்படம் முற்பிறப்பின் தொடர்ச்சி தானே.

இவ்வாறு மூப்பர் கூற, ஆலடியில் சிறிது நேரம் மௌனம் நிலவியது. மௌனத்தைக் கலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** இஞ்சே சிறாப்பர் நான் கேட்டது, யாழ்.போதனா வைத்தியசாலையில சிறுமியின் கை அகற்றப்பட்ட விவகாரம் தொடர்பில ஆளுநர் அலுவலகம் விசாரணை நடத்துதோ எண்டு தான்.

இவ்வாறு விதானையார் கூறியதும் அவசரப்பட்ட வாத்தியார் வைத்திலிங்கம், சிறுமியின் கை அகற்றப்பட்டது தொடர்பில ஆளுநர் அலுவலகம் விசாரணை நடத்துறது என்பதற்கு அப்பால, யாழ்.போதனா வைத்தியசாலையில நோயாளர்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகள் தொடர்பில பொது மக்கள் முறைப்பாடு செய்யிறதுக்கென ஆளுநர் அலுவலகத்தில தனியான முறைப்பாட்டுப் பிரிவு ஒன்றை வடக்கு மாகாண ஆளுநர் ஆரம்பிக்க வேணும்.

இவ்வாறு வாத்தியார் கூறியதும் இடையில் குறுக்கிட்ட சாத்திரியார் ஏன்? வாத்தியார், வடக்கு மாகாணத்தில உள்ள அத்தனை வைத்தியசாலைகளிலும் நடக்கிற தவறுகள், பிழைகளை முறையீடு செய்யக் கூடியதாக முறைப்பாட்டு அலுவலகம் ஒன்றை வடக்கு மாகாண ஆளுநர் உருவாக்கினால் நல்லதல்லோ.


இவ்வாறு சாத்திரியார் கூற, அனைவரும் நல்லது. வடக்கு மாகாணத்தில இருக்கிற அத்தனை வைத்தியசாலைகளிலும் உள்ள குறைபாடுகள், பிழைகள் தொடர்பில அந்தந்த இடங்களில இருந்து, ஒன்லைன் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ முறைப்பாடு செய்வதற்கான உப அலுவலகம் ஒன்றை வடக்கு ஆளுநர் ஆரம்பித்து அதனைச் செம்மையாக இயக்க வேணும்.

இந்த நடவடிக்கை நிச்சயம் வெற்றி தரும். இதில இருந்து முறைப்பாட்டுப் பிரிவுகளை விஸ்தரித்து ஏனைய திணைக்களங்கள், அரச அமைப்புக்களில் நடக்கின்ற முறைகேடுகளையும் அங்கு பொது மக்களுக்கு இழைக்கப்படுகிற அநீதிகளையும் முறையீடு செய்வதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்கலாம்.

இவ்வாறு ஆலடியில் ஆலோசனை முன்வைக்கப்பட, அதனைத் தானும் ஆதரிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.


ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிலவு சிவசக்தி பூமியில் காணி விலைக்கு போக வாய்ப்பிருக்கிறதா வியாசரே?




ராஜபக்ஷக்கள் மீது சனல் 4 இற்கு வரலாற்றுப் பகை இருப்பதாக நாமல் எம்.பி கூறுகின்றாரே?

**திரேஷ் — வதிரி**

**சில நல்லவர்களை சந்தர்ப்ப சூழ்நிலை கெட்டவர்களாக ஆக்கிவிடுகிறதே?**

இந்தியாவில் நடந்த உண்மைச் சம்பவம் ஒன்று.

பள்ளிக் கூடத்தில் தனது பேரனை விட அதிக புள்ளிகளை எடுக்கும் மாணவன் ஒருவரை கூல் ரிங்கில் நஞ்சு கலந்து கொலை செய்த பாட்டியை பொலிஸார் கைது செய்தனர்.

தனது பேரன் குறித்த மாணவனுடன் வகுப்பில் போட்டி போட்டு படிக்கின்ற போதிலும் அவனைப் புள்ளிகளில் வெல்ல முடியவில்லை என பாட்டியிடம் கூறி கவலைப் பட்ட பேரனுக்காக கூல் ரிங்கில் நஞ்சு கலந்து பள்ளிக் கூடத்திற்குச் சென்று உனது தாயார் கொடுத்து விட்டார் என குறித்த மாணவனிடம் கொடுக்க அதை நம்பி குடித்த அந்த மாணவன் உயிரிழந்தான்.

விசாரணைகளில் பாட்டி சிக்கினார். பேரனில் உள்ள அன்பு அவருக்கு கொலைகாரி பட்டத்தை வாங்கிக் கொடுத்தது.

**சுதன் — குப்பிழான்**

**ராஜபக்ஷக்கள் மீது சனல் 4 இற்கு வரலாற்றுப் பகை இருப்பதாக நாமல் எம்.பி கூறுகின்றாரே?**

வன்னிப் பெரு நிலப்பரப்பில் தமிழினம் கொத்துக் கொத்தாக மடிந்ததை, அங்கு போர் குற்ற மீறல்கள் நடந்ததை சனல் 4 பல ஆதாரங்களுடன் வெளியிட்டது.

அப்போது அனைவரும் அதை பொய் என்று வாதிட்டு ராஜபக்ஷக்களைக் காப்பாற்ற முனைந்தனர்.

ஆனால் இப்போது உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு ராஜபக்ஷக்களின் ஆட்சி அதிகார ஆசையே காரணம் எனக் கூறிய போது அதற்கு சர்வதேச விசாரணை தேவை எனக் கோரிக்கை விடுகின்றார்கள்.

அப்படியெனில் தமிழினத்துக்கு ஒரு நீதியும் பெரும்பான்மை சிங்கள இனத்துக்கு இன்னொரு நீதியுமா?

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**8 வயதுச் சிறுமிக்கு நடந்த கொடுமைக்கு நீதி கிடைக்குமா வியாசரே?**

எங்கு தவறிளைக்கப்பட்டாலும் அத்தவறை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் வைத்தியத் துறையில் தவறு ஏற்படுமாயின் அது ஏற்றுக் கொள்ளப்படமுடியாத ஒன்று.

அதிலும் சிறுவர்கள் தொடர்பில் வைத்தியர்கள், வைத்தியத்துறையினர் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்.

ஒரு சிறிய அசமந்தம் சிறுமியின் கனவுகள் அத்தனையையும் தவிடு பொடியாக்கிவிட்டது. அந்தப் பிஞ்சுக் குழந்தை இனி தன் சக நண்பர்களுடன் இயல்பாய் பழக முற்படுவதென்பது நடைபெறாத ஒன்று.

இறைவா உன் திருவிளையாடலை பிஞ்சு மாணவி மீது தான் காட்ட வேண்டுமா?

சிறுமிக்கு நடந்த அநீதிக்கு நீதி வேண்டும். இதையே மக்கள் கேட்கின்றனர்.

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**மகாலட்சுமி — கொக்குவில்**

**நிலவு சிவசக்தி பூமியில் காணி விலைக்கு போக வாய்ப்பிருக்கிறதா வியாசரே?**

நிலவின் தென் துருவத்தில் ஒக்சிசன் உண்டு என சந்திரயான் ஆராய்ந்து கூறிவிட்டது. அங்கு ஒக்சிசன் இருக்குமென்றால் மனிதர் வாழ்வதற்கு ஏதுவான சூழ்நிலை இருக்கிறதா என்பதைக் கண்டறிந்து அதிலும் வெற்றி பெற்றுவிட்டால் பிறகென்ன. நிலவில் காணி வாங்கி மனிதன் குடியமர்வான்.

நாம் பூமியில் இருந்து நிலவை ரசிப்பது போல நிலவில் இருந்து பூமியை ரசிப்பான் மனிதன்.

நினைக்கவே வியப்பாகவும் மகிழ்வாகவும் இருக்கிறது அல்லவா?

வேற்றுக் கிரகத்தில் மனிதன் கால் பதித்த அடுத்த கணம் இந்தப் பூமி வெடித்து சிதறுவது மட்டும் உண்மை.

**கனேஸ் — பருத்தித்துறை**

**இலங்கை சிங்கள . பௌத்த நாடு என்கிறார்கள். ஆனால் இந்து நாகரிகத்திற்கு சர்வதேச அங்கீகாரம் கிடைக்கப்போகிறதே?**

குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டினால் குதிரைக்கு களைக்குமா என்ன? ஆதலால் ஓட்டட்டும் என்று அமைதி பெறுவோமே?

கிணற்றுத் தவளைகளிடம் போய் இது சிறிய கிணறு. இந்த கிணற்றை விட பெரிய உலகு உண்டு என்று சொன்னால் தவளைகள் அப்படி கூறுபவர்களைப் பார்த்து சிரிக்கும் அல்லவா. சரி சிரிக்கட்டும் என்று விட்டு விட வேண்டியது தான்.

**திகான் — வடமராட்சி**

**இந்திய பாடகர்களுக்கு கோடிக் கணக்கில் கொட்டி நிகழ்வு நடத்துவது வறுமையை மீட்கும் செயலா?**

கலை நிகழ்வு ஒன்று நடக்கிறது அதில் எம்மூர் கலைஞர்கள் மட்டும் பங்குபற்றுகிறார்கள் என்றால் யாரும் குறித்த நிகழ்வை வந்து பார்த்து எம் கலைஞர்களை ஊக்குவிக்க தயார் இல்லை.

இதுவே ஒரு திரைப்பட,தொலைக்காட்சி பிரபல்யங்கள் குறித்த நிகழ்ச்சிக்கு வருகிறார்கள் என்றால் கூட்டம் அள்ளும்.

குறித்த பிரபல்யங்களுக்காகவே நிகழ்வைப் பார்க்க வருபவர்கள் அதிகம்.

என்ன செய்வது எம்மவர்களின் திறமையை வெளிக் கொணரவேண்டும். என்றால் கூட பிரபல்யங்களின் அறிமுகம் தேவையாக இருப்பது தான் வேதனை.

**மதுவன் — மீசாலை**

**சனல் 4 காணொளியின் வெளிப்பாடு பற்றிக் கூறமுடியுமா வியாசரே?**

ஒரு திரைப்படத்தில் வடிவேலு கூறுவார் எனக்கு வந்தா இரத்தம் உனக்கு வந்தா தக்காளிச் சட்னியா என்று.

அது நகைச்சுவை ஆயினும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான சனல் 4 வீடியோவைப் பார்த்த பெரும்பான்மை அரசியல் தலைவர்கள் உடன் சர்வதேச விசாரணைகள் தேவை எனக் கோருகின்றனர்.

வன்னிப் பெருநிலப் பரப்பில் அரச படைகள் புரிந்த போர் குற்ற மீறலை அன்று சனல் 4வெளியிடும் போது இவர்கள் தான் இது பொய்யான தகவல் என்றார்கள்.

அப்போது பொய்த் தகவல் வெளியிட்டதாகவும் இப்போது மெய் தகவல் வெளியிட்டதாகவும் கூறுவதற்குள் இருக்கும் இனப் பாகுபாட்டை என்னவென்று கூறிவிட முடியும்.

**கணேசலிங்கம் — வ.வு.பூந்தோட்டம்**

**வாரம் ஒரு நகைச்சுவை கூறினால் சிறப்பாக இருக்கும்.இந்தவாரம் ஒரு நகைச்சுவை கூறுங்களேன் வியாசரே?**

காதலி- ராஜ் நாங்கள் பிரிந்திடலாம் டா?

காதலன்- ஏன்டி. நம்ம காதலை உன் வீட்டில் ஏற்கவில்லையா?

காதலி- இல்லடா. நாம் திருமணம் செய்தால் நமக்கு பிறக்கும் குழந்தைக்கு உன் பெயரை இனிசலா மட்டும் தான் வைக்கலாம்.

ஆனால் நான்வேற ஒருத்தரை கட்டினால் எனக்குப் பிறக்கும் குழந்தைக்கு உன் பெயரையே வைக்கலாம். அது தான்.

காதலன்- அடி சண்டாள சிறுக்கி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்த்திக் கடன் நிறைவேறுமா?



1960களில் வாழ்ந்த மனிதனிடத்தே மனிதம் வாழ்ந்தது. மனிதாபிமானம் ஓங்கி நின்றது. தொழில்நுட்பம் சார்ந்த வளர்ச்சி அப்போது உச்சம் பெறவில்லை.

சாதாரண தொலைக்காட்சிப்பெட்டி, வானொலிப் பெட்டியை பார்ப்பதென்றாலே அது பெரும் வியப்பிற் குரியதான காலம்.

ஆனால் அந்தக் காலத்தில் சமூகம் சார்ந்த சிந்தனைகள் இளைஞர் இடத்தே மேலோங்கி இருந்தது.

அக்காலத்திலேயே தமிழினத்துக்கான நீதி வேண்டிய இளைஞர்களின் போராட்டம் தோற்றம் பெற்றதை இங்கு சுட்டிக்காட்ட முடியும்.

துரதிஷ்டம் ஏனோ இப்போதைய சமூகத்திடம் மனிதம் வாழ்கிறதா என்பதை தேடித்தான் பார்க்க வேண்டும்.

மனிதாபிமானம் பொதுநோக்கு சிந்தனை இருக்கிறதா என்பதை அளந்து தான் பார்க்க வேண்டும்.

எங்கும், எதிலும் எமக்கென்ன என்ற சிந்தனையின் வெளிப்பாடு எமது வீட்டுக் குப்பையை எதிர்வீட்டு மதிலோரம் கொட்டும் சுயநல கலாசாரம் நோயாய் தொற்றி விட்டது.

இது புரட்டாதி மாதம் என்பதால் ஈழத்தின் சைவ கோயில்கள் அனைத்தும் கொடியேறி விழாக் கோலம் பூண்டு விட்டன.

ஊரில் உள்ள சிறிய கோயில்களில் எல்லாம் அலங்கார உற்சவம் களை கட்டி விட்டது.

வெளிநாட்டுக் காசு விசம்புக்கு விளையாட வெடியோடு வான வேடிக்கை விண்ணை வர்ணமயமாக்க காத்தோடு கரைந்து போகிறது இலட்சம் இலட்சமாய் பணம்.

குலதெய்வத்துக்கு நேர்த்தி வைத்து, அலகு வேல்குத்தி காவடி எடுக்கும் கலாசாரம் தமிழர் மரபின் வெளிப்பாடு.

அதிலும் தூக்குக் காவடி எடுக்கும் நேர்த்தி அருளின் உச்சம் எனலாம்.

கோவில்களுக்கு தூக்கு காவடி எடுக்கும் பக்தர் வீதியில் செல்லும் போது வீதி வழி வரும் ஆலயங்களின் வாயில்களில் தேங்காய் அடித்து, சூடம் ஏற்றிச் செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

அவ்வாறு வீதியில் அடிக்கப்பட்ட தேங்காய் வாகனங்களின் சில்லுக்குள்ளும் பாதசாரிகளின் கால்களுக்குள்ளும் மிதிபட்டு வீதியில் சிதறிக் கிடப்பதைப் பார்க்கும் போது கடவுளே உனக்காக எமது நோக்கம் நிறைவேற மேற்கொள்ளும் ஒரு நேர்த்திக் கடனில் இப்படி ஒரு கொடுமை நடக்கிறதா என நெஞ்சம் பதைபதைத்து விடுகிறது.

வீதியில் அடிக்கப்பட்ட தேங்காய் சிரட்டைகள் செல்லும் வாகனங்களின் சில்லுகளில் குற்றி காற்றுப் போக அவர்கள் யாரை மனம் நொந்தபடி வாகனங்களை உருட்டிச் செல்வார்கள் என்பதை நேர்த்திக்கடன் செய்யும் நாம் சிந்திக்க வேண்டும்.

ஒருவரால் நேர்த்திக் கடனுக்காக மேற்கொள்ளப்படும் செயல் மற்றவர்களை உபாதைக்குள்ளாக்கும் செயலாக மாறினால் அந்த நேர்த்திக் கடனை மேற்கொள்வதில் ஏதும் நன்மையுண்டா என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும்.

நாம் செய்ய வேண்டியது: நேர்த்திக் கடனுக்காக வீதிகளில் அடிக்கும் தேங்காய்களை சேகரித்து எங்கு நேர்த்திக் கடனை முடிக்கிறோமோ அந்த கோவிலில் அவற்றை ஒப்படைத்தால் நிச்சயம் நாம் மேற்கொள்ளும் நேர்த்திக் கடனுக்கு பரிகாரம் கிடைக்கும்.

மீண்டும் மீண்டும் நாம் தவறிழைக்காமல் செய்யும் செயலைச் சரியாகச் செய்வோம் பலனைப் பெறுவோம். அதனூடே பயனை அடைவோம்.

மாவை.நாகஜேந்திரன்

# மாறிவரும் இளம் சமுதாயம்

பதின்மம் தொடங்கி பதினெட்டு கடந்த ஒருவரை இந்தச் சமுதாயம் இளையோர் என்ற வரையறையின் ஆரம்பமாய் கருதுகிறது. தொடர்ச்சியாக 30 வயது வரை இளையோர் என்ற வரையறையினை கொடுப்பதால் பெரும்பாலான நன்மையும் தீமையும் இந்த சமுதாயத்தை சூழ்ந்து கொள்கின்றது. அன்றைய இளையோரும் இன்றைய இளையோரும் என்ற தலைப்பில் பல்வேறு விவாத, பட்டிமன்றங்கள் எல்லாம் நிகழும் இந்நேரத்தில் நானும் இதனை எழுதுகிறேன்.

சூழலும் தொழில்நுட்பமும் மாறிமாறி தமக்குள்ளே போட்டி போட்டுக் கொண்டு முன்னேற நினைத்தாலும் இறுதியில் தொழில்நுட்பம் முன்னேறிக் கொண்டு செல்கின்றது. அன்று எல்லாம் ஒரு தாயானவள் தனது குழந்தையை தூங்கச் செய்வதற்கு "ஆராரோ" என்று பாடிய காலம் போய் இன்று youtube இல் பாட்டைப் போட்டு headphone ஐ காதில் சொருகி குழந்தையை தூங்க வைத்து, வாழ்க்கை எனும் நாடகத்தினை சின்னத்திரையில் நாடகமாய் பார்க்கும் சமுதாயமாய் மாறிவிட்டது என்றால் அதனை என்னவென்று சொல்வது?

தந்தை வெளிநாட்டில் சென்று கஷ்டப்பட, தாய் உள்நாட்டில் அழகு கடையில் காலம் கழிக்க மகன் NS, RS, KTM என மோட்டார் சைக்கிளில் சுழன்று திரிய குடும்பமே இரவுகளில் கூட ஒன்றாகாத நாட்களுடன் குடும்பங்கள் காலத்தை கடத்திச் செல்கின்றன. இதன் விளைவே வீதிவிபத்தில் அதிகமாக பதிவு செய்யப்படும் இன்றைய இளைஞர்கள். "இந்த வயது போனால் வேற வயது இல்லை" என்ற எண்ணத்திலே 17 வயதிலே "L" Board, 18 வயதிலே Licence என்று காலமும் மாறி ஓட காலனும் காலமாய் வருகிறான்.

ஊருக்கொரு தொலைபேசி, ஒரு வீட்டுக்கொரு தொலைபேசி ஆகி ஆளுக்கொரு தொலைபேசி அதுவும் Smart phone என வாழ்வை Smart ஆக்க உற்பத்தியானது இன்று பல பெண்கள், ஆண்களின் வாழ்வை அழிக்க வந்த எமனாக நிற்கிறது. Facebook, Twitter, Whatsapp, Viber என்று சமூக வலைத்தளங்களில் மட்டும் நின்றுவிடாது கூத்து, நடனம், பரதம் என்ற பாரம்பரியம் tiktok இல் சீரழிந்து போகிறது. வெள்ளித்திரையில் வீணாய்ப் போன பல பாடல்களே இன்று tiktok இல் பலரை பாழாய்ப் போகச் செய்கிறது.

அன்றைய காலத்தில் பலரும் அறியாத புதுச்சொல்தான் ஆங்கிலத்தில் இன்று சிறுவர் முதல் பெரியவர் வரை குறிப்பாக இளம் சமுதாயம் அடிக்கடி கூறும் "depression" ஆகும். காதல் தோல்வி, குடும்பச்சண்டை, நட்புகளில் துரோகம், சிறுவயது கர்ப்பம் போன்ற பல செயற்பாடுகளின் இறுதி விளைவாகவே இது அறியப்படுகிறது. இன்று பல ரியூசன் சென்று பல நேரம் படித்தவன் எல்லாம் பல்கலைக்கழகம் சென்றவுடன் பலமாகக் கூறும் ஒரு வார்த்தை இதுவாகும். depression வந்தவர்களின் நாட்டமிகு பொருளே போதை ஆகும். பியர் அடித்தலில் தொடங்கி கஞ்சா, குடு, ஹெரோயின் வரை நீண்ட வரிசை பட்டியலாக செல்கிறது. கல்வி கற்ற சமுதாயம் முதல் காவாலிகள் வரை அனைவருமே இன்று போதைப்பொருளினை கௌரவமாகக் கருதுகின்ற மாற்றமிகு சமுதாயம்.

தற்கால வெள்ளித்திரைப் பாடல்வரிகளை உதாரணமாகக் கொண்டு வாழும் புதிய சிந்தனை உடைய இளைய சமுதாயம் அழிவின் விளிம்பிலே சீர்கெட்டதாய் பயணிக்கிறது. மேலைத்தேய கலாசாரத்தினை எடுகோளாகக் கொண்டதன் விளைவால் பண்பாடும் பாரம்பரியமும் புளித்த பாலாய் திரண்டு போய்விட்டது.

மாணவர்களின் மனதில் மாற்றம் ஏற்பட்டால் அன்றி மாறிவரும் இந்த சமுதாயத்தை மாற்றமுடியாது. எனவே சமுதாயத்தை பாதுகாக்கும் பொறுப்பு ஒவ்வொரு துறை சாந்தவர்க்கும் உள்ளது என்பதை நினைவில் நிலைநிறுத்த வேண்டும்.

"எதுவரினும் உளம் அதில் மாற்றம்வரினும் தன்நிலை அறியாத் தன்மையாம் இதில்"

சிவானந்தர் கஜவதனன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

**திரைப்படம்: பாக்கியலெட்சுமி**

**பாடகர் : P.சுசீலா**

**இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்**

**இயற்றியவர்: கண்ணதாசன்**



மாலை பொழுதின் மயக்கத்திலே
நான் கனவு கண்டேன் தோழி
மாலை பொழுதின் மயக்கத்திலே
நான் கனவு கண்டேன் தோழி

மனதில் இருந்தும் வார்த்தைகள் இல்லை
காரணம் ஏன் தோழி
காரணம் ஏன் தோழி ஆ ஆ ஆ...

மாலை பொழுதின் மயக்கத்திலே
நான் கனவு கண்டேன் தோழி

இன்பம் சிலநாள் துன்பம் சிலநாள் என்றவர்
யார் தோழி இன்பம் கனவில் துன்பம் எதிரில்
காண்பது ஏன் தோழி
காண்பது ஏன் தோழி ஆ ஆ ஆ...

மாலை பொழுதின் மயக்கத்திலே...

மணமுடித்தவர் போல் அருகினிலே
ஓர் வடிவு கண்டேன் தோழி
மங்கை என் கையில் குங்குமம் தந்தார்
மாலை இட்டார் தோழி

வழி மறந்தேனோ
வந்தவர் நெஞ்சில் சாய்ந்து விட்டேன் தோழி
அவர் மறவேன் மறவேன் என்றார்
உடனே மறந்து விட்டார் தோழி
பறந்து விட்டார் தோழி ஆ ஆ ஆ..

மாலை பொழுதின் மயக்கத்திலே..

கனவில் வந்தவர் யாரென கேட்டேன்
கணவர் என்றார் தோழி
கணவர் என்றால் அவர்
கனவு முடிந்ததும் பிரிந்தது ஏன் தோழி

இளமை எல்லாம் வெறும் கனவு மயம்
இதில் மறைந்தது சில காலம்
தெளிவும் அறியாது முடிவும் தெரியாது
மயங்குது எதிர்காலம்
மயங்குது எதிர்காலம் ஆ ஆ ஆ...

மாலை பொழுதின் மயக்கத்திலே...

மனதில் இருந்தும் வார்த்தைகள் இல்லை
காரணம் ஏன் தோழி காரணம் ஏன் தோழி
ஆ ஆ ஆ...

மாலை பொழுதின் மயக்கத்திலே..

# மீண்டும் மீண்டும் அதே கனவு காரணம் இதுதான்!

வேகவேகமாகத் தேர்வெழுதிக் கொண்டிருக்கிறார் அந்தப் பெண். நேரம் முடியப் போகிறது என்ற அறிவிப்பு வந்ததும் விடைத்தாளை நூலில் கட்டி ஆசிரியரிடம் கொடுக்கும் போதுதான் சில தாள்கள் கட்டப்படாமல் இருப்பதைக் கவனிக்கிறார். ஆனால், அவற்றைக் கொடுப்பதற்குள் அறையை விட்டே போய்விடுகிறார் ஆசிரியர். முடிவு தேர்வில் தோல்வியடைகிறார்.

இந்தக் கனவு அவருக்கு ஒரு முறை யல்ல. சிறுவயதில் இருந்தே பல ஆண்டுகளாக அவ்வப்போது வந்து செல்கிறது. இதே அனுபவம் நம்மில் பலருக்கும் இருக்கலாம். தேர்வெழுதித் தோற்றுப்போவது, நேர்காணலில் தேர்ச்சியடையாதது என்பது மாதிரியான கனவுகள். ஒரே கனவு மீண்டும் மீண்டும் வருவதற்குப் பின்னணியில் இருக்கும்.

"ஒரே சம்பவம், விடயம் அடிக்கடி கனவாக வருவதை "ரெக்கரிங் டிரீம்ஸ்" (Recurring dreams) என்பார்கள். இந்தப் பிரச்சினை பலருக்கு இருக்கிறது. கனவு வருகிறது என்பது மட்டும் தெரியும். விடிந்ததும் அதை மறந்து விட்டு அடுத்த வேலையைச் செய்யத் தொடங்கி விடுவார்கள். ஏன் இது போல நிகழ்கிறது என்பதை ஆராயவோ அதற்குத் தீர்வு காணவோ பெரும்பாலும் யாரும் முயல்வதில்லை.

### ஏன் வருகிறது?

கடந்த காலங்களில் ஏதாவது எதிர்மறையான விடயம் நடந்து, அது மனதில் பயத்தை விதைத்திருந்தாலும் நாம் எதிர்பார்த்த ஒரு விடயத்துக்கு எதிர்பார்த்த முடிவு, நிறைவு ஏற்படாமல்போனாலும் பூர்த்தியாகாத விடயங்கள் ஏதாவது இருந்தால், இதைச் செய்ய வேண்டும், அதைச் செய்ய வேண்டும் என அடுத்தடுத்த கமிட்மென்டுகளால் ஏற்படும் மனப்பதற்றம் போன்றவற்றாலும் ஒரே கனவு மீண்டும் மீண்டும் வரலாம்.

ஒரு விடயம் நமது மனதில் ஆழமாகப் பதிந்து, அது உணர்வு ரீதியாக நமக்குப் பதற்றத்தையும் மனஅழுத்தத்தையும் கொடுக்கும் போது அது நினைவுகளில் சேகரிக்கப்படுகிறது. இதனால் ஒரே கனவு மீண்டும் மீண்டும் வரலாம். அந்தந்தச் சூழலுக்குத் தகுந்தாற் போல் பாசிட்டிவ், நெகட்டிவ் என நமக்கு நிறைய கனவுகள் வரும். ஒப்பீட்டளவில் பார்த்தால் மீண்டும் மீண்டும் வருபவை எதிர்மறையான கனவுகள்தான்.

### செல்போனும் காரணமாகலாம்


பொதுவாகவே, ஆழ்ந்த தூக்கம் இல்லாமல் தடைப்பட்ட தூக்கம் இருக்கும் போதுதான் கனவுகள் வரும். ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தால் மூளையும் அமைதியாகவே இருக்கும். ஆழ்ந்த தூக்கம் இல்லாமல் இருக்கும் போது மூளையும் வேலை செய்து கொண்டே இருக்கும். தூக்கம் வரும்வரை செல்போன் பார்ப்பதும்கூட மூளையைத் தூண்டி விழிப்பாக வைத்திருக்கும். இதனால் தூங்கும் போது கனவுகள் வரும்.

### சுகாதாரமான தூக்கம்

ஆழ்ந்த தூக்கம் வருவதற்குத் தூக்க ஒழுக்கத்தைப் பின்பற்ற வேண்டும். இரவு அதிக நேரம் விழித்திருக்காமல் 10 மணிக்கே தூங்கச் செல்ல வேண்டும். அப்போதுதான் உடலின் இயக்கத்துக்குத் தேவையான நல்ல ஹார்மோன்கள் சுரக்கும். தூங்கும் அறை இருட்டாக இருக்க வேண்டும், தூங்குமிடம் அதிக சத்தத்துடன் இருக்கக்கூடாது. இவையெல்லாம் நல்ல தூக்கத்துக்குக் காரணிகள்.

### தீர்வு என்ன?

ஒரே கனவு மீண்டும் மீண்டும் வருவதைத் தவிர்க்க வேண்டுமென்றால் அதற்கு தூக்கத்தைச் சரிசெய்வதோடு உளவியல் ரீதியாகவும் சில மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். பாசிட்டிவ்வான விடயம் நடக்கும் போது அதை சந்தோஷமாக அணுக வேண்டும். சிறிய பிரச்சினைகளுக்குத் துவண்டு போகாமல் தன்னம்பிக்கையுடன் செயற்படக் கற்றுக் கொள்ள வேண்டும்.



நாம் செய்து முடிக்க அல்லது அடைய வேண் டிய விடயங்களைப் பட்டியலிட்டு வைத்திருப்போம். அதைப் பார்க்கும்போதெல்லாம் உந்தப்பட்டு அவற்றை அடைவதற்கான செயல்முறையைத் தொடங்க வேண்டுமே தவிர, அந்தப் பட்டியலைப் பார்த்து, நினைத்து மன அழுத்தத்துக்கு ஆளாகக் கூடாது.

ஒரு செயலைச் செய்ய வேண்டும் அல்லது ஒரு குறிக்கோளை அடைய வேண்டும் என்றால், அதை அடைவதற்கான செயல் முறையைத் தொடங்க வேண்டும். அதைவிடுத்து அதன் முடிவை நினைத்து ஸ்ட்ரெஸ் ஆகக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்நீச்சல்



பூவிற்குள்ளும் தேனிருக்கும்
புன்னகைக்குள்ளேயும்
மகிழ்ச்சி நிறைந்திருக்கும்
காற்றுக்குள்ளே குளிரிருக்கும்
மலைக்கடியிலும் நீரிருக்கும்
வாழ்க்கையிலே
சந்தோசம் மலர்ந்து வரும்-அதை
வாழ்ந்துவா உனக்கு- வாழ்க்கை பிடிக்கும்

நெஞ்சுக்குத் தேவை நேர்மை
நேசித்துவா காலவரையறையினை
காலமது மாறி வராது காத்திருந்தால்-
நேரமது நில்லாது

தேவைகளை யாராலும் வழங்க முடியாது
தேவையில்லாமல் பயணிக்காமல்
வாழ்கைப் பயணம் செய்வோம் எப்போதும்
எதிர்நீச்சலாய்

கவியரசன் KJ றெக்ஸ்,
அக்கராயன் .

## வாழ்வை நேசிப்போம்

வாழ்வுதனை நேசிப்போம் வளமுடன் வாழக் கற்றுக்கொள்வோம்
நாளை என்ற ஒன்று உண்டு என்று நம்பிக்கையோடே பயணிப்போம்
கடமைதனை செய்வோம், கவலைகளை மறப்போம்
காரிருள் நம்மை சூழ்ந்தாலும் கதிரவன் வருவான் என்று
காத்திருப்போம் விடியும்வரை

வாழ்க்கை என்பது அழகானது, அதை வாழ்ந்து முடித்தலே நிறைவானது
பாதியில் வாழ்க்கையை வீணாக்கி -அழித்து
உனைப் பாசத்தோடு பார்ப்பவர் மனதினை புண்படுத்தாதே
உன் வாழ்வை அழிப்பதனால் உன் பிரச்சினை தீர்ந்ததாக
ஒருபோதும் நினைக்காதே.
அது உனை சார்ந்தவர் பிரச்சினையாக உருவாகும்
உன்னால் சமாளிக்க முடியாத பிரச்சினையை
உனை சார்ந்தவர் எவ்வாறு சமாளிப்பர்
முதலில் யோசி பிறகு நேசி
அது உன்னையும், உன் வாழ்வையும் உனை சார்ந்தோரையும்


ஒருபுறம் போர் முழக்கம், மறுபுறம் மரணபயம்
இருந்தாலும் உயிர்மாய்ப்பு எண்ணம் ஒருபோதும்
வந்ததில்லை எவருக்கும் அன்று
இன்று போர் இல்லை பொழுதுபோக்கோ
அதிகம் இருந்தாலும் இந்த விபரீத எண்ணம் வீணாக வருவதேன்
விடியலை தொலைப்பதேன் உணர்ந்திடு மானிடமே
உலகமே உன்கையில்

உன் வாழ்வில் தடையேதும் ஏற்பட்டு உளச்சோர்வு உண்டானால்
உடனடியாக உளநல ஆற்றுப்படுத்தலை நாடி
உனக்கானஉள ஆறுதலை, ஆதரவை பெற்றுக் கொள்
மாண்டிடும் உன் கனவு மறைந்திடும் அடியோடு
மீண்டெழும் தன்மை உருவாகும் உனக்குள்
நாளைய பொழுதும் நலமுடன் விடியும் உனக்காக
வளமுடன் யோசி. வாழ்வுதனை நேசி
சிறந்திடும் வாழ்க்கை சீரும் சிறப்புமாய்.

அ.மௌலி


## விபத்துக்களை தவிர்த்திடுவோம்

மது போதையில் வாகனம் செலுத்தினால்
மனிதர்களுடன் மட்டுமல்ல
மரங்கள் மதில்களோடும் மோதி
விபத்துக்கள் வந்திடலாம்
போதைப் பொருள் பாவித்தாலும்
இவ்வாறே நடந்திடலாம்
கை பேசியில் கதைத்துக் கொண்டும்
தூக்கம் வரும் நேரத்திலும்
எந்த வாகனத்தை ஓட்டினாலும்
விபத்துக்கள் தேடி வரலாம்
அதிக பயணிகளை ஏற்றும் ஆசையில்
போட்டிக்கு ஓடும் பஸ் வண்டிகள்
காட்டுக்குள் நுளையவும் கூடும்
ஆற்றில் பாயும் வாய்ப்பும் கிட்டும்
அதிவேகமாக வாகனங்களை செலுத்தினால்
இவ்வாறே நடந்திடலாம்
சந்திகள் வந்தவுடன் தாமதியுங்கள்
உந்துருளிகள் குறுக்கே ஓடி வரும்
பள்ளிப் பிள்ளைகளும் குறுக்கிடலாம்
மிதி வண்டிகளும் விரைந்து வந்திடலாம்
தொடர் வண்டிக் கடவைகளிலும்
அதிக கவனம் செலுத்துங்கள்
எந்த வாகனமாயினும் திருத்த வேலைகளை
திருப்தியாய் செய்திடின் விபத்துக்களையும்
தவிர்த்திடலாம் என்பது உண்மையே



கலாபூஷணம் ,இ.காசிப்பிள்ளை,கொடிகாமம்

## மௌனத்தின் தேடல்- 685



### பொறியில் அகப்பட்ட எலி போல

பொறி வைத்து எலியினை
கொல்லும் மனிதா! உன்
சூது வாதினை கபட எண்ணங்களை
பொறியினுள் அகப்பட்ட எலியைப்
போல் நீ அழிந்திடுவாய்

க. திருமகள்,
பண்டத்தரிப்பு.

### குரூரர் நாம்

அப்பாவி மனிதர்களையே தந்திரமாய்
சிக்கலில் மாட்ட வைத்து
வேடிக்கை பார்க்கும் குரூர மனிதர் நாம்
உன் போன்ற ஜீவன்களை பொறியில்
சிக்கச் செய்வது என்ன புதினமா?

சி.இ .அன்புதுரை,
மானிப்பாய்.

### தோப்பும் கோப்பும்

தனி மரமானது
கனி தந்தாலும்
தோப்பாகி பலன் தர
தொகை மரங்கள் வேண்டும்
சோம்பல் மிகுதியாலும்
சொகுசான வாழ்விற்காகவும்
கோப்புக்கள் தேங்கி
தோப்பாகி தோன்றுவதால்
பொறுத்தது போதுமென்று
பெருச்சாளியாரும் உரிமையுடன்
உயிரினங்கள் வாழட்டுமென்று
பொதுவுடமையாக்குகின்றார்

க.நாகராசா,நுணாவில்

### சிந்தனை செய் மனமே!

மனிதா ! மனிதா! மரணப் பொறியில் அன்று
மாயமாய் மரணித்தோம் உண்மை என்று
மனிதா !மனிதா! விஞ்ஞானம் வளர்ந்தது அன்று
மயங்கிய அறிவும் வளர்ந்தது இன்று
பொறிக்கு பயந்தது போதும் அன்று
பொங்கியெழுந்தன எலிகள் இன்று
சிந்திக்க தெரிந்த மனிதா! அன்று
சிந்திக்கத் தவறுகின்றாய் இன்று

பிறேமா தியா ,
யாழ்ப்பாணம்.

## மௌனத்தின் தேடல்- 686



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சாங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

### காவல் துறையாலும் முடியாதது

நம் வீட்டில் தொல்லை தரும் எலிகளை
இப்படி மரணப் பொறிக்குள் சிக்க
வைத்து நாம் பிடிக்கலாம்
ஆனால் இன்று யாழ்ப்பாணத்தில்
வாழ் வெட்டுக்கள் –போதைப்
பொருள் போன்ற
சட்டவிரோத செயல்களை தினம்
அரங்கேற்ற வாழ்வில்
பாதை தவறும் இளம் சந்ததிகளே!
உங்களை காவற்றுறையாலும்இன்னமும்
கட்டுபடுத்த முடியவில்லையடா

சு .ஜெயரூபன் ,
பருத்தித்துறை.

### பொறி

வளைகளுள் சுதந்திரமாய்
துள்ளித்திரிந்த எலிகள்
தமக்கென விரித்த வலை
என அறியாமல்
அதன் உள் இருந்த
உணவு வாசனையால்
ஈர்க்கப்பட்டு தாமாகவே
வந்து வீழ்ந்தன
பொறியினுள்

சி.மகாலட்சுமி,
கொக்குவில்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடல்புறா




## மதி சொன்ன கதை

தன் வளர்ப்புத் தந்தையால் தன் கணவனாக வரிக்கப்பட்டவர் இன்னொருத்தியிடமும் இந்தப் பணிகளைப் புரிந்திருக்க முடியும் என்று நினைத்த தந்தையின் திட்டமும் யோசனையும் இளையபல்லவனுக்கு அடியோடு தெரியாதென்ற நினைப்புகூட அந்த சமயத்தில் இல்லை அவளுக்கு.

தனக்குத்தானே ஏற்படுத்திக் கொண்ட உரிமையிலும் அதனால் விளைந்த கோபத்திலும் திளைத்த மஞ்சளழகி சரேலென்று தன் கைகளைப் பின்புறம் கொண்டு போய்க் குழல்களைத் தோள்புறமாக முன்னுக்கு வாங்கித் தன் இரு கைகளாலும் பிரிக்க ஆரம்பித்தாள். சிலையென அதுவரை நின்றிருந்தவள் திடீரென சிணுங்கியபடி தன் கைகளிலிருந்த குழல்களைப் பிடுங்கி முன்புறம் கொண்டு போய்விட்டதன் காரணத்தை அறியாத இளையபல்லவன், "மஞ்சளழகி" என்று மெல்ல அழைத்தான்.

"ஏன்?" கோபத்துடன் வந்தது அவள் கேள்வி.

கோபத்துக்குக் காரணம் அவனுக்குப் புரியவில்லை. கோபித்துக் கொண்டவளுக்கும் அது புரியவில்லை. அந்த நிலை புரியாத விடயங்கள் நடக்குமென்பது மட்டும் அந்த இருவருக்கும் புரிந்திருந்தது. அப்படிப் புரிந்த நிலையிலும் குழம்பிய அந்த இருவரில் இளைய பல்லவனே பேச்சைத் தொடர்ந்து, "இந்த இடத்தில் உன்னை நான் எதிர்பார்க்கவில்லை?" என்று ஏதோ சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொன்னான்.

மஞ்சளழகியின் பதில் பட்டென்று வெளிவந்தது. "நான் யாரையுமே எதிர்பார்க்கவில்லை?" என்றாள் அவள்.

"யாரையுமே எதிர்பார்க்கவில்லையா!" அவன் குரலில் வியப்பு ததும்பி நின்றது.

"இல்லை"

"ஏன்?"

"இந்த இடத்திற்கு யாரும் வருவது கிடையாது அக்ஷயமுனைத் தீவின் ஒதுக்குப்புறம் இது."

"ஆமாம்?"

"என்ன ஆமாம்?"

"ஒதுக்கப்புறமாகத்தானிருக்கிறது."

"இப்பொழுதுதான் தெரிந்ததா அது?"

"இல்லை, முன்பே தெரிந்தது."

"முன்பே தெரிந்ததா!" என்று சீறினாள் மஞ்சளழகி வந்தேன் என்று நகைத்தான் இளையபல்லவன்.

அதற்குமேல் என்ன சொல்வதென்றும் மஞ்சளழகிக்குப் புரியவில்லை.

"ஒதுக்குப்புறமென்பதால்தான் நானும் நீராட வந்தேன் என்று சொல்வதா? சே! சே! என்ன கேவலம்?" என்று நினைத்தாள் அவள். அந்த நினைப்பிலும் தனக்கும் அவனுக்கும் எத்தனை ஒற்றுமையிருக்கிறது என்பதை எண்ணிப்பார்த்து மகிழ்ச்சியும் கொண்டாள். இருந்தாலும் அந்த மகிழ்ச்சியை வெளிக்குக் காட்டாமல் பொய்க் கோபத்துடன் கேட்டாள். "வந்தபின் இங்கு நான் நீராடுவதைப் பார்த்தீர்களல்லவா?" என்று.

பார்த்தேன் இளையபல்லவனின் குரலில் சங்கடம் ஒலித்தது.

"பார்த்தபின் உங்கள் கடமை என்ன?" என்று வினவிய அவள் குரலில் அப்பொழுதும் கோபம் தெரிந்து.

"கடமையா!" மென்று விழுங்கினான் இளைய பல்லவன்.

"ஆம், கடமை"

"எந்தக் கடமையைச் சொல்கிறாய்?"

"பண்பாடு உணர்த்தும் கடமை." "விளங்கத்தான் சொல்லேன்."

(தொடரும்...)


---

# நான் வைரமுத்து பேசுகிறேன்... 22

அவரது பேனா வாகை சூடிய வாளைப் போன்று வணக்கத்துக்குரியதாகிவிட்டது.

அந்தவகையில் "நமது சகோதர மொழியின் தளபதி ஒரு கிழட்டுப் பிச்சைக்காரியைப் பற்றி" எழுதுகையில் மானுடம் குனிந்து கொண்டே கண்ணீர் வடிக்க வேண்டியிருக்கிறது.

**"அதோ....**
**அந்தச் சாலையோரத்து**
**மரத்தடியில்**
**அணைந்துபோன அடுப்பாய்**
**ஒரு**



**கிழட்டுப் பிச்சைக்காரி.**

**அவளோடு**
**சண்டையிடும் ஈக்களை**
**விரட்டவும் சக்தியில்லை.**

**அவளைவிட**
**ஒரு பிணமே**
**தேவலை!**
**பிச்சை கேட்கவும்**
**சக்தியில்லை.**

**இப்போதே நடுங்குகிறாள்**
**இன்னும் வரவில்லை**
**குளிர் காலம்!"**

வார்த்தைப் படங்களான இந்த வார்ப்படம் பிச்சைக்காரியின் பிசுக்கை நம் மீது ஒட்ட வைக்கிறது.

அவர் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் என்பதோ, விருது பெற்றவர் என்பதோ, திரைப்படங்களுக்கு வசனமும் பாடலும் வரைந்தவர் என்பதோ அவர் கீர்த்திக்கு காரண

## தெலுங்கு பாரதி

மில்லை.

இவற்றுக்கெல்லாம் முன்னும் பின்னும் அவர் கவிஞர் என்பதுதான் அவரது கலையாத புகழின் காரணம்.

தன் சுய சோகங்களைப் பொதுச் சோகங்களாய், பொதுச் சோகங்களை சுய சோகங்களாய்ப் பார்க்க கற்றறிந்த அந்தக் கவிஞர் இளைய தலைமுறைப் படைப்பாளிகளுக்கு முன்னோடியாய் இருந்து முடிந்து போனார்.

கவிஞராய் மட்டும் இல்லாமல், மனித குலத்தின் விமர்சகராகவும் இருந்திருக்கிறார்.

இப்படித்தான்... இப்படித்தான்...

மனிதர்கள் தங்கள் காதுகளுக்குக் கவசம் தயாரித்துக் கொண்டாலும் மகா கவிகள் தங்கள் சங்குகளில் மூச்சுக் காற்றைச் செலுத்தியாவது முழங்கிக் கொண்டே இருக்கிறார்கள்.

மானுடனே, உன் காதுகளுக்குப் பூட்டியிருக்கும் கவசங்களை கழற்று.

அந்தச் சங்கொலியில் உன் உயிர் சிலிர்க்கட்டும். உணர்வு விழிக்கட்டும்.

## அந்தி மந்தாரைகள்

சில மாதங்களாகவே அவர்களை நான் தூரத்திலிருந்தே துப்பறிந்து வருகிறேன்.

அவர்கள் சந்தித்துக் கொள்வது அவர்களை விட எனக்குத்தான் ருசியாக இருக்கிறது.

அந்தப் பூங்காவில் இலைகளிலும் தளிர்களிலும் மஞ்சள் வெளிச்சம் வழியத் தொடங்கும் போது அவர்கள் வந்து சேருகிறார்கள்.

அவர்களுக்குரிய பெஞ்சில் அவர்களைத் தவிர ஒரு பறவை கூட உட்காருவதில்லை.

ஓ! அவர்களின் சிநேகம் பூமியைத் தொடாத மழைத் துளியைப் போல் சுத்தமானது.

அவர்களின் எண்ணிக்கை எட்டிலிருந்து பத்துக்குள்.

அவர்களின் சராசரி வயது எழுபதிலிருந்து எண்பதுக்குள்.

ஒவ்வொருவர் கண்களிலும் வயதான வளையங்கள்.

கழுவி வைத்த தும்பைப் பூவைப் போல மொத்தமாய் வெளுத்திருக்கும் சுத்த நரைகள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'


# சுகமான விடியல்

364

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## மகப்பேறு இன்மை... வைத்திய ஆலோசனைகளைப் பெறுதல் சிறந்தது

மகப்பேறு இன்மை என்பது, உலகளாவிய ரீதியிலும் இலங்கையிலும் குறிப்பாக வட மாகாணத்திலும் முக்கியமானதொரு பிரச்சினையாக பரிணமித்துக் கொண்டு வருகிறது. இந்த பிரச்சினை ஏற்படுவதை எவ்வாறு குறைத்துக் கொள்ளலாம் என்பதில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். இந்த மகப்பேறு இன்மை என்பது கிட்டத்தட்ட ஆறில் ஒரு தம்பதியினரைப் பாதிக்கும். திருமணமான பின்னர், எந்தவொரு கருத்தடை முறைகளையும் பயன்படுத்தாமல் குறைந்தது ஒரு வருடம் கிரமமாக உடலுறவு கொள்ளும் போது, அநேகமானவர்களுக்கு குழந்தை தங்குகிறது. கிரமமாக என்றால், மாதவிடாய் தவிர்ந்த காலங்களில் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு ஒரு தடவை ஆகும். அதன்படி பார்த்தால் 85% ஆனவர்களுக்கு ஒரு வருட இறுதியில் குழந்தை தங்குகிறது. இன்னும் சிறிது காலம் விட்டுப் பார்த்தால், 92% ஆனவர்களுக்கு இரண்டு வருடங்களின் இறுதியில் குழந்தை தங்குகிறது. ஆகவே, குறைந்தது ஒரு வருடம் முயற்சி செய்தும், குழந்தை தங்கவில்லை என்றால், வைத்தியரை அணுகுவதே நல்லது. ஆனால், இதில் என்ன முக்கியம் என்றால், சாதாரண உடற்தொழிற்பாடுகளில் இருந்து மாறுபட்ட உடற்தொழிற்பாட்டினை உடைய தம்பதியினர் நேரத்துடனேயே வைத்தியரை சந்திக்க வேண்டியது அவசியம். உதாரணமாக, பெண்களை எடுத்துக் கொண்டால், ஒழுங்கற்ற மாதவிடாய் உடையவர்களுக்கு, சூலகத்தில் இருந்து முட்டை வெளிவருவதும் ஒழுங்கற்ற முறையில் காணப்படும். சில சமயம் ஒரு வருடத்தில் மூன்று அல்லது நான்கு தடவைகள் மாத்திரம் முட்டை வெளிவரும் தன்மை காணப்படலாம். அப்படியானவர்கள் உடனேயே வைத்தியரை அணுகி, பரிசோதனைகளை மேற்கொண்டு அதற்கான சிகிச்சைகளை எடுக்க வேண்டும். அதேபோல், மாதவிடாய் காலத்தில் கடுமையான வலியினை உடையவர்கள் அல்லது உடலுறவு கொள்ளும் போது கடுமையான வலி உள்ளவர்களும் வைத்தியரை நாடி பரிசோதனை செய்து, ஆலோசனையை பெற்றுக் கொள்ள வேண்டும். இத்தகைய வலி ஏற்பட பல காரணங்கள் இருக்கலாம். முக்கியமாக, Endometriosis என்ற நோய் நிலை அதில் பல பேருக்கு இருக்கலாம். இந்த வருத்தமானது, குழந்தை தங்கும் நிலையை மட்டும் பாதிப்பதில்லை. அவர்களது வாழ்க்கை நலத்தையும் பாதிக்கும். நேரத்துடன் வைத்தியரை அணுகுதல் என்றால், சிகிச்சைகளைப் பெற வேண்டும் என்பதில்லை. முதலில் அடிப்படையான பரிசோதனைகளை செய்து பார்த்து, அவை சாதாரணமாக இருந்தால், நீங்கள் ஒன்று அல்லது இரண்டு வருடங்கள் முயற்சித்து பார்க்கலாம்.



பின் சிகிச்சைகளை எடுத்துக் கொள்ளலாம்.


அடிப்படை பரிசோதனைகள் என்பதில் முக்கியமானவையாக ஆண்களினுடைய விந்தின் அளவு, விந்தின் தொழிற்பாட்டுத் தன்மை என்பவற்றைப் பரிசோதித்தல் மற்றும் பெண்களின் கர்ப்பப்பை, சூலகம் என்பன சாதாரண நிலையில் உள்ளதா, தொழிற்படுகிறதா என பரிசோதித்தல் ஆகியவை அடங்குகின்றன. இவற்றிற்கு மேலதிகமாக இன்னும் சில அடிப்படை பரிசோதனைகள் காணப்படுகின்றன. முக்கியமாக, உடல் திணிவு அளவுச் சுட்டி சாதாரண வரையறைக்குள் இருக்கிறதா, நீரிழிவு நோய் இருக்கிறதா, தைரொக்சின் சம்பந்தமான பிரச்சினைகள் இருக்கிறதா என அறியும் பரிசோதனைகள் இவற்றுள் அடங்கும். மகப்பேறு இன்மை எனும் பிரச்சினை வரும் முன்னரே அதை தடுப்பதற்காக முயற்சிகளை எடுப்பது சிறந்த வழிமுறையாகும். உடல் நிறையை சரியான விதத்தில் பேணுவது அவசியம். இதற்கு, ஆரோக்கியமான உணவு, கிரமமான உடற்பயிற்சி என்பவற்றில் கவனம் செலுத்த வேண்டும். அத்துடன் மது அருந்துதல், புகைப் பிடித்தல் என்பனவும் மகப்பேறு இன்மைக்கு முக்கியமான காரணங்களாக அமைகின்றன. இவற்றை தவிர்த்தல் சிறந்தது. அடிப்படையான பரிசோதனைகளுக்கு அடுத்த கட்டமாக, மேலதிக சோதனைகள் சிலவும் செய்வதுண்டு. அவை என்னவென்று பார்ப்போம். ஒன்று அல்லது இரண்டு வருடங்களின் பின்னரும் குழந்தை தங்கவில்லை என்றால், பெண்களில் முட்டை உருவாகிறதா என்று பார்க்க மற்றும் முட்டைக் கருக்கள் எவ்வளவு இருக்கின்றன என்று பார்க்க சில பரிசோதனைகள் காணப்படுகின்றன. அத்துடன், ஆண்களில் பல விந்து பரிசோதனைகள் காணப்படுகின்றன. இவற்றுடன், விந்தும் முட்டையும் சந்திக்கும் பாதை, சந்தர்ப்பம் எப்படி என்று கண்டறியும் பரிசோதனைகளும் காணப்படுகின்றன. அவற்றில், உடலுறவு கொள்ளும் போது ஏதேனும் பிரச்சனைகள் இருக்கின்றதா, கர்ப்பப்பையினுள் சென்ற விந்து முட்டையை சந்திக்கிறதா, கர்ப்பப்பை குழாயில் ஏதேனும் அடைப்புக்கள் காணப்படுகின்றதா என அறியும் பரிசோதனைகளும் உள்ளடங்கும். இப்பரிசோதனை முடிவுகள் சாதாரணமாக இருந்தும் குழந்தை தங்கவில்லை எனில், அதன்பின் உங்கள் வயதின்படி, உங்கள் விருப்பப்படி மேலதிக சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக சிகிச்சை முறைகளாக, முட்டை வெளிவருவதை தூண்டுதல் மற்றும் ஆண்களுடைய விந்தை எடுத்து, அதில் தேவையற்ற பகுதிகளை நீக்கி, விந்து அணுக்களை கர்ப்பப்பையினுள் ஊசிகள் மூலம் செலுத்துதல் (Intra uterine inse mination) என்பவை அடங்குகின்றன. இவற்றின் மூலம் 10-15% பலன் கிடைக்கும். இந்த சிகிச்சை முறைகளும் பலனளிக்கவில்லை எனில், அடுத்ததாக In vitro fertilization (IVF) முறை மூலம் முயற்சித்து பார்க்கலாம். அதாவது பெண்களின் சூலகத்தில் முட்டைகளை வளரச்செய்து, அந்த முட்டைகளை வெளியே எடுத்து, ஆணினுடைய விந்துடன் இணையச் செய்து, முளையம் என்ற கருவை உருவாக்கி, பின்னர் அந்த முளையத்தை சரியான தருணம் வரும்போது பெண்களின் கர்ப்பப்பைக்குள் செலுத்தி விடுதலே IVF முறை ஆகும். இம்முறை 30-50 % வரை வெற்றிகரமாக பலனளிக்கக் கூடியது. ஆனால், அடிப்படை சிகிச்சை முறைகளில் இருந்து அதிவிசேட சிகிச்சை முறையான IVF இற்கு செல்லும் போது, செலவு அதிகரித்துச் செல்கிறது. இதனால் பெரும்பாலானவர்களுக்கு அதனை செய்து கொள்ளும் வாய்ப்பு இல்லாமல் போகிறது. ஆகவே, மீண்டும் வலியுறுத்துவது என்னவென்றால், மகப்பேறு இன்மையை சாதாரணமான ஒரு பிரச்சினையாக எடுத்துக் கொள்ளாமல், ஆரம்பத்திலேயே அது குறித்து கவனம் எடுத்து, மாதவிடாய் ஒழுங்கில்லாமல் வருபவர்கள் அல்லது உடல் திணிவுச் சுட்டி கூடியவர்கள் அல்லது விந்து அணு குறையக்கூடிய சந்தர்ப்பம் உள்ளவர்கள் உதாரணமாக, விதைப்பையில் அறுவை சிகிச்சை செய்தவர்கள், கதிர்வீச்சு மற்றும் வெப்பநிலை அதிகமாக உள்ள இடத்தில் தொழில் செய்பவர்கள் ஆகியோர், நேரத்துடன் வைத்தியரை அணுகி, அடிப்படையான பரிசோதனைகளைச் செய்து, அது சம்பந்தமான வைத்திய ஆலோசனைகளைப் பெறுதல் சிறந்தது.

Dr.ந.சரவணபவா,
பெண் நோயியல் மகப்பேற்று வைத்திய நிபுணர்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொராக்கோவில் பாரிய நிலநடுக்கம்

❖ 632 பேர் உயிரிழப்பு
❖ 153 இற்கும் மேற்பட்டோர் காயம்



**(மொராக்கோ)**

**மொராக்கோ நாட்டில் ஏற்பட்ட பாரிய நிலநடுக்கத்தில் சிக்குண்டு 632 பேர் உயிரிழந்துள்ளதுடன், 153 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.**

குறித்த நிலநடுக்கம் 6.8 ரிச்டர் அளவில் பதிவாகியுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வட ஆபிரிக்க நாடான மொராக்கோவில் நேற்று முன்தினம் இரவு குறித்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

இந்த நிலநடுக்கம் மாரகேஷக்கு தென்மேற்கு பகுதியில் 18.5 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கத்தினால் பல கட்டடங்கள் சேதமாக்கப்பட்டுள்ளதுடன், ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (நி)

# யா/ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி, புத்தூர், யாழ்ப்பாணம்
# நிறுவுநர் தின சிறப்பிதழ்-2023 செப்டெம்பர் -10

## வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

யாழ்.ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி அமையப்பெற்றுள்ள யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் கல்விப்பணிப்பாளர் என்ற வகையிலும் இக் கல்லூரியின் நிறுவுநர் உயர்திரு.மழவராயர் கந்தையா அவர்களினால் அதன் மேம்பாடு கருதி உருவாக்கப்பட்டதுமான சோமாஸ்கந்தக் கல்லூரியினது தர்மகர்த்தா சபையின் தலைவர் என்ற வகையிலும் இக்கல்லூரியினது நிறுவுநர் நினைவு தினமும் பரிசில் தினமும் சிறப்படைய வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இலங்கை அரசாங்கம் அனைவருக்கும் கல்வி வழங்க வேண்டும் என்னும் எண்ணப்பாட்டுடன் இலவசக் கல்வியினை வழங்குவதற்கு முன்னதாகவே புத்தூர் கிராமத்தில் தனி ஒருவராம் மழவராயர்-கந்தையா அவர்களின் எண்ணத்தில் உருவான இலவசக்கல்வி பற்றிய சிந்தனைச் சிதறல்களுக்கு அமைவாக உருவாக்கப்பட்ட இப்பாடசாலையானது தானத்தில் சிறந்த வித்தியாதானத்தை இடையறாது வழங்கும் பொருட்டு ஏராளமான சொத்துக்கள் மற்றும் அவற்றின் மூலமான வருமானங்களையும் கல்விப்பணிக்காக பயன்படும்படி ஏற்பாடு செய்ததோடு அதனை செவ்வனே நிர்வகிக்கும் பொருட்டு ஒரு தர்மகர்த்தா சபையினையும் நிறுவிப் பெரும் சமூகப்பணியாற்றிய செம்மலாவார்.

இப்பாடசாலையோடு ஆன்மீக நெறி வளர்க்க புத்தூர் சிவன் தேவஸ்தானத்தையும் அன்னதானம் எனும் அருங்கொடை வழங்க அன்ன சத்திரம் என்பவற்றையும் உருவாக்கி அவற்றிற்கென பெரும் நிதிகளையும் சொத்துக்களையும் வாரி வழங்கிய வள்ளற் பெருமகன் இவராவார். இன்று இக்கல்லூரியானது பல்வேறு சிறப்புக்களையும் எண்ணற்ற சாதனைகளையும் தனதாக்கிக் கொண்டு கோப்பாய் கோட்டத்தின் சகல வளங்களும் கொண்டதாகத் திகழ்வதற்கு காரணமாய் விளங்குவது மழவர் மைந்தனின் அறப்பணியே ஆகும். மேலும் இக்கல்லூரியானது சாதனைகளின் சிகரங்களைத் தொட்டு நிற்க இறைவனை வேண்டுவதோடு இன்றைய நன்னாளில் பரிசில்களைப் பெற்றுக்கொள்கின்ற மாணவச் செல்வங்களையும் அயராது உழைக்கின்ற பாடசாலைச் சமூகத்தினரையும் மனமகிழ்ந்து வாழ்த்துவதில் பேருவகையடைகின்றேன்.

**திரு.பொ.ரவிச்சந்திரன்,**
**வலயக்கல்விப் பணிப்பாளர்,**
**வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.**

## கோட்டக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி

அமரர்.மழவராயர் கந்தையா அவர்களால் 1931 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையானது இன்று ஒரு 1AB பாடசாலையாகத் திகழ்கின்றது. பாடசாலையின் கல்வி அபிவிருத்தியை மையமாகக் கொண்டு மாணவர்களின் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவது. இப்பாடசாலைக்கே உரித்தான சிறப்பம்சமாகும். இன்று இப்பாடசாலையில் 1107 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 5 மாணவர்கள் கலைப்பிரிவில் 3 A சித்தியைப் பெற்று இப்பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்கள். வருடாந்தம் பல்கலைக் கழகம். தேசிய கல்வியியற்கல்லூரி மற்றும் பிற கற்கை நெறிகள் என்பவற்றிற்கு மாணவர்கள் தெரிவு செய்யப்படுவது பாராட்டுக்குரியதாகும். இன்று அதிபர். ஆசிரியர்கள் மற்றும் பாடசாலைச் சமூகத்தினரின் ஒன்றிணைவால். முன்மாதிரியான பாடசாலையாகத் திகழ்ந்து வருகின்றது. இக்கல்லூரியின் சாதனைப் பயணம் மென்மேலும் வளர எனது ஆசிகளையும் வாழ்த்துக்களையும் கூறி நிற்கின்றேன்.

**திரு.நா.சிவநேசன்,**
**கோட்டக்கல்விப்பணிப்பாளர்,**
**கோட்டக்கல்வி அலுவலகம், கோப்பாய்.**

## தர்மகர்த்தா சபையின் வாழ்த்துச் செய்தி

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் கல்வி பாரம்பரியத்தில் மையமாகத் திகழ்கின்ற புத்தூர் பிரதேசத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரிக்கென தனித்த பாரம்பரியமும் நீண்ட வரலாறும் உண்டு. இத்தகைய பாரம்பரிய வரலாறானது வள்ளல் மழவராயர் கந்தையா அவர்களின் அறம்பணிகளால் ஆரம்பித்து வைக்கப்பட்டது எனலாம்.

வள்ளல் மழவராயர் கந்தையா அவர்கள் ஆலயம், கல்விக கூடம், அன்னசத்திரம் முதலான தர்மப்பணிகளைச் செய்ததோடு அவை சிறப்புற செயற்பட வேண்டும் என அசையும், அசையாச் சொத்துக்களையும் வழங்கி அவற்றை நிர்வகிப்பதற்காக தர்மகர்த்தாக்களையும் நியமித்திருந்தார்.

மழவராயர் கந்தையா அவர்களால் செயற்படுத்தப்பட்ட கல்விக்கூடமானது 91 ஆண்டுகளை கடந்து பல்லாயிரக்கணக்கான கல்விமான்களையும் உருவாக்கி பெரு விருட்சமாக வளர்ந்து நிற்கிறது.

ஒரு நாட்டின் பெறுமதிமிக்க வளம் மாணவர்களே. இவர்கள் நனி சிறந்த கல்வியைப் பெற்று உயர்நிலையடைந்து மேலும் நாடு போற்றுகின்ற கல்வியாளர்களாகவும் நற்பிரஜைகள் ஆகவும் மிளிர வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

வாழ்க அமரர் நாமம்
வளர்க அவர் பணி

**தர்மகர்த்தா சபையினர்,**
**யா/ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்.**



**உயர்திரு.மழவராயர் கந்தையா**
**ஸ்தாபகர்**

தந்தை:- சிற்றம்பலம் மணியகாரன் - மழவராயர்
தாய்:- சின்னையா - சின்னத்தங்கச்சிப்பிள்ளை
தோற்றம்:- 10.09.1887 (விபவ ஆண்டு ஆவணி மாதம் 25 ஆம் நாள் ரோகிணி நட்சத்திரம்)
மறைவு- 15.05.1936 (வைகாசி மாதம் பூர்வபக்ஷபஞ்சமி)
அத்திபார தினம்:- தைமாத அத்த நட்சத்திரம்
வித்தியாரம்பதினம்:- வைகாசி மிருகசீரிட நட்சத்திரம்

## வள்ளலாரின் பணிகள்:

- **விசாலாட்சி சமேத விசுவநாத பெருமானுக்கான ஆலயம் (புத்தூர் சிவன்) அமைத்தமை.**
- **புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரியை அமைத்து இலவசக் கல்விப் போதனையை மேற்கொண்டமை.**
- **ஏழைகளின் பசிப்பிணி தீர்க்க அன்ன சத்திரம் அமைத்தமை.**
- **நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் அமைக்க கதிர்வேலாயுத சுவாமி மடாலயத்துடன் கூடிய நிலத்தை நல்லூரில் வழங்கியமை.**
- **உலக நன்மை கருதி தர்மசாதனத்திற்காகத் தனது கோடிக்கணக்கான சொத்தை வழங்கியமை**

## பழைய மாணவர் சங்கத்தின் வாழ்த்துச் செய்தி

1931 ஆம் ஆண்டு தனி மனித முயற்சியால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியானது யாழ்ப்பாண கல்விப் பாரம்பரியத்தில் நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்டதாகும். சைவத்தையும் தமிழையும் இரு கண்களாகப் பேணிப் பாதுகாத்த வள்ளல் மழவராயர் கந்தையா அவர்கள், ஏழைச்சிறுவர்கள் அனைவரும் கல்வி கற்க வேண்டுமென்கின்ற உயரிய சிந்தனையில் அமைக்கப்பெற்ற இக்கல்லூரியின் கல்வி கற்ற பழைய மாணவர்கள் உள்நாட்டிலும் புலம்பெயர் நாடுகளிலும் உயர் பதவிகளைப் பெற்று என்றென்றும் கல்லூரி அன்னையை மறவாதுள்ளார்கள்.

1945 இல் இலங்கை அரசு இலவசக் கல்வியை அறிமுகம் செய்வதற்கு முன்னரே அமரர் அவர்களால் தீர்க்கதரிசனமாக கல்லூரியை அமைத்து இலவசக் கல்வியை அறிமுகப்படுத்தியுள்ளார் என்றால் அவரின் எண்ணங்கள், அபிலாசைகள் எவ்வாறு உள்ளது என்பது சிந்திக்கற்பாலனது. 92 வருடங்களில் சமூகத்துடன் தன்னை இணைத்துக்கொண்ட கல்லூரி அன்னை கல்வி மற்றும் இணை பாடவிதானச் செயற்பாடுகள் அனைத்திலும் சிறந்து விளங்குகின்றமை கல்லூரியின் வளர்ச்சிக்கு தக்க சான்றுகளாகும். கல்லூரியின் வளர்ச்சியில் உள்நாட்டு, புலம்பெயர் நாட்டு பழைய மாணவர்களின் பணிகள் காத்திரமானவை.

அமரரின் எண்ணங்கள் ஈடேற நாம் அனைவரும் செயற்பட்டு மென்மேலும் கல்லூரி பல்துறைகளிலும் வளர்ச்சியடைய வேண்டுமெனவும் இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் அனைவரும் ஒழுக்க சீலர்களாகவும் உயர் கல்வியறிவு கொண்டவர்களாகவும் திகழ வேண்டுமெனவும் இன்றைய நிறுவுநர் நாளிலே வாழ்த்துகின்றோம்.

வாழ்க அமரர்பணி.
வளர்க சோமாஸ்கந்தக் கல்லூரி.

**பழைய மாணவர் சங்கம்,**
**யா/ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்.**

(C-7120)

## சிவாச்சாரியாரின் ஆசிச்செய்தி

நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் ஆகிய இந்த நன்நாளில் இங்கு கல்வி கற்கும் மாணவர்களினதும் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களினதும் ஆன்மா லயிக்கும் இடமான ஆலயத்தையும் ஏழை மக்களின் பசிப்பிணி தீர்க்கும் அன்ன சத்திரத்தையும் அனைவருக்கும் கல்விச் செல்வம் கிடைக்க வேண்டி இந்த கல்விக் கூடத்தையும் நிறுவிய மழவராயர் கந்தையா அவர்களின் எண்ணம் நிறைவேற வேண்டி எல்லாம் வல்ல சோமாஸ்கந்த பெருமானை திரிகரண சக்தியுடன் பிரார்த்தித்து ஆசி கூறுகின்றேன்.

**சாமி சோமசுந்தரக்குருக்கள்,**
**சிவன் தேவஸ்தானம், புத்தூர்.**

## அதிபரின் வாழ்த்துச் செய்தி

யா/ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் நிறுவுநர் நினைவு நாளும் பரிசில் தினமுமாகிய இந்நன்னாளிலே இக்கல்லூரியின் முதல்வர் என்ற வகையில் வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

ஒரு மனிதனைப் புனிதனாக்குவதற்குச் சிறந்த கருவி கல்வியேயாகும் என்பதை உணர்ந்த எமது ஸ்தாபகர் மழவராயர் கந்தையா அவர்களின் சிந்தனையின் விளைவே இக்கல்லூரியின் தோற்றம்எனலாம் அவரது அன்றைய சிந்தனை எத்தனையோ சிறார்களின் அறிவுப் பசியைப் போக்கிக்கொண்டிருக்கிறது. அவரது பணிகள் பல தசாப்தங்களைக் கடந்து இன்றும் பேசப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

வள்ளலார் அமைத்த கல்லூரியில் கல்வி பயின்றவன் என்ற வகையில் நான் மட்டற்ற மகிழ்வடைகிறேன். இக்கல்லூரியை ஸ்தாபிப்பதற்கு அவரது சிந்தனை முகிழ்ப்பு எவ்வாறு அமைந்ததோ அதற்கு அமைந்தாற்போல் எமது மாணவர்களும் கல்வி, கலை, பண்பாடு, ஒழுக்கம், மென்திறன்கள் என யாவற்றிலும் சிறந்து விளங்கிக் கல்லூரியின் புகழை எங்கும் பரப்ப வேண்டுமென நிறுவுநர் நாளும் பரிசில் தினமுமான இந்நாளிலே இறைவனை வேண்டுகின்றேன்.

இன்று எமது கல்லூரியானது வசதிமிக்க விஞ்ஞான ஆய்வுகூடம், தொழில்நுட்ப ஆய்வுகூடம், புத்தாக்க ஆய்வுகூடம், கணித ஆய்வுகூடம் எனும் வளங்களைப் பெற்றுக்கொண்டு கோப்பாய்க் கோட்டத்தில் புகழ்மாலை சூடி நிற்கின்ற இவ்வேளையில் வள்ளலாரின் கீர்த்தியைப் பரப்பவும் இதய சுத்தியுடன் பணி செய்யவும் இந்நாளில் திடசங்கற்பம் பூணுவதோடு பரிசில் பெறுகின்ற மாணவச் செல்வங்களையும் வாழ்த்தி வள்ளலாரின் அருளாசியையும் வேண்டி நிற்கிறேன்.

**திரு.சின்னத்தம்பி திரிகரன்,**
**கல்லூரி முதல்வர்,**
**யா/ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி.**

## ஆரம்பப் பாடசாலை அதிபரின் வாழ்த்துச் செய்தி

ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் வருடந்தோறும் நடைபெறுகின்ற நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்-2023 இற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெரு மகிழ்வடைகின்றேன்.

அமரர்.மழவராயர் கந்தையா அவர்களினால் 1931 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை அரசினால் பொறுப்பேற்கப்பட்டு கல்விப் பணியினைச் செவ்வனே ஆற்றி வருகின்ற பாடசாலைகளில் ஒன்றாகத் திகழ்கின்றது. அனைவருக்கும் தரமான கல்வி வழங்க வேண்டும் என்பது அரசின் குறிக்கோளாகவுள்ளது. அந்த வகையில் தன்னைச் சூழ்ந்த கிராம மாணவர்களுக்கு கல்வியை வழங்கும் பணியினை இக்கல்லூரி சிறப்புடன் ஆற்றி வருகின்றது.

இக்கல்லூரித் தாயின் மடி தவழும் மாணவர்கள் கல்விப் பெறுபேறுகளிலும் இணைபாடவிதான செயற்பாடுகளிலும் திறமைகளைக் காட்டி வருவதோடு தேசியம் வரை கால்பதித்துள்ளமை பெருமைக்குரிய விடயமாகும். இத்தகைய பெருமைக்காகப் பாடசாலையில் அயராது உழைத்து வருகின்ற பாடசாலைச் சமூகத்தினருக்கு இன்நன்னாளில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் துறை ரீதியாக இன்றைய தினம் பரிசில்களைப் பெறுகின்ற மாணவச் செல்வங்களையும் மனதாரப் பாராட்டுவதில் பேருவகை அடைகின்றேன். மேலும் இக்கல்லூரி அன்னை வள்ளலார் அமரர்.மழவராயர் கந்தையாவின் எண்ணம் ஈடேற எல்லாம் வல்ல சோமாஸ்கந்தப் பெருமான் வழிசமைக்க வேண்டும் என வாழ்த்தி நிற்கின்றேன்.

**திரு.செ.ஜெயகாந்தன் (அதிபர்),**
**யா/ஸ்ரீ சோமாஸ்கந்த இந்து ஆரம்பப் பாடசாலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விசாரணைக்கு ரணில் தயாராம்

## விஜயதாஸ ராஜபக்ஷ

(கொழும்பு)

"உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணைகளை முன்னெடுக்கத் தயார் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ள போதும் ஒரு தரப்பினர் அதற்குச் சாதகமான நிலைப்பாட்டைத் தெரிவிக்கவில்லை. குண்டுத் தாக்குல் சம்பவத்தில் ஆளும், எதிர்த் தரப்பினர் முரண்பட்டுக் கொண்டால் ஒருபோதும் உண்மையைக் கண்டுபிடிக்க முடியாது.

எனவே, ஆளும் - எதிர்த் தரப்பினர் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (நி)

# 6 கோடி ரூபா மதிப்பிலான ஐஸ்போதைப் பொருள் பறிமுதல்

(மன்னார்)

இலங்கைக்கு கடத்துவதற்காக வேதாளை மீனவ கிராமத்தில் உள்ள வீடு ஒன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 6 கோடி மதிப்புள்ள 6 கிலோ ஐஸ் போதைப் பொருளினை பறிமுதல் செய்த மண்டபம் போலிஸார் ஐஸ் போதைப் பொருளை இலங்கைக்கு கடத்த முயன்ற பெண் உட்பட நான்கு பேரை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த வியாழக் கிழமை மண்டபம் அடுத்த வேதாளை எம்ஜிஆர் நகரில் வசித்து வரும் சேது ராஜன் என்பவர் வீட்டில் இலங்கைக்கு கடத்துவதற்காக போதைப்பொருள் பதுக்கி வைத்திருப்பதாக கிடைத்த ரகசிய தகவல் அடிப்படையில் குறித்த் வீட்டில் அதிரடி சோதனை நடத்திய வேளை வீட்டிலிருந்து 6 பாக்கெட்டுகளில் 6 கிலோ ஐஸ் போதைப்பொருள்கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பாக வீட்டின் உரிமையாளர் மற்றும் சூடவலைச்சு பகுதியை சேர்ந்த அவரது உறவினர் ஆகியோரிடம் போலிஸார் நடத்திய விசாரணையில் சென்னையில் இருந்து ஐஸ் போதைப் பொருள் காரில் வாங்கி வந்ததாக தெரியவந்ததையடுத்து இருவரையும் கைது செய்த மண்டபப் பொலிஸார் இலங்கைக்கு கடத்திசெல்ல உடந்தையாக இருந்தது தெரிய வந்ததையடுத்து குறித்த இருவர் மீதும் வழக்குப் பதிவு செய்துள்ளனர். (நி)

## பெயர்மாற்ற அறிவித்தல்

கடற்கரை வீதி, பருத்தித்துறையில் வசிக்கும் தங்கவேலு சிறிகாந்தரூபன் எனும் பெயரை இன்று முதல் சிறிஸ்காந்தரூபன் என மாற்றம் செய்கின்றேன்.

எனவே இனிவரும் காலங்களில் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் இப் பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை வாழ் சனநாயக குடியரசின் கீழ் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

உண்மையுள்ள, தங்கவேலு சிறிஸ்காந்தரூபன் (7018)


## மணிவிழா வாழ்த்துக்கள்

10.09.2023 அன்று தனது சேவையை நிறைவு செய்து பணிநிறைவு பெற்று மணிவிழா கொண்டாடுகின்ற எமது பாடசாலையின் ஆசிரியரும் பகுதித்தலைவருமான திருமதி. ஞானவசந்தி ஜெயக்குமாரன் அவர்களுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வதோடு ஓய்வுகாலம் சிறப்பாக அமையப் பிரார்த்திக்கின்றோம்.




திருமதி. ஞானவசந்தி ஜெயகுமாரன்

வாழ்த்துக்கவி

உங்கள் உருவத்தில் தாய்மை ததும்பும்
சேவையில் கனிவு தெரியும்
அறிவிலே அடக்கம் புரியும்
மாணவரை அணுகுவதில் பாசம் நிறையும்
வணிகப் பாடத்தின் வளம் நீங்கள்
குழந்தை மனம் படைத்தவர் நீர்வீர்
எம்பள்ளியின் பொருளாளர் எனும் ஆளுமையாகி
பல ஆளுமைகளை உருவாக்கிய உங்களை
இம் மணிவிழா நாளில்
வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றோம்.

சேவைக்காலம்

| | |
|---|---|
| 21.03.1990 - 05.05.1996 | -யா/வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயம் |
| 06.05.1996 - 18.01.1999 | -கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம் |
| 19.01.1999- 25.05.1999 | -கிளி/ஊற்றுப்புலம் அ.த.க.பாடசாலை |
| 26.05.1999- 31.12.1999 | -கிளி/செட்டியாகுறிச்சி அ.த.க.பாடசாலை |
| 01.01.2000- 31.07.2004 | -கிளி/ஐயனார் அ.த.க.பாடசாலை |
| 01.08.2004-27.10.2009 | -கிளி/கனகபுரம் மகாவித்தியாலயம் |
| 28.10.2009- 29.01.2010 | -யா/திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயம் |
| 30.01.2010- 31.12.2011 | -கிளி/கனகபுரம் மகாவித்தியாலயம் |
| 01.01.2012- 31.12.2012 | -கிளி/பாரதி வித்தியாலயம் |
| 01.01.2013- 11.02.2013 | -கிளி/கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம் |
| 12.02.2013- 10.09.2023 | -கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம் |

2015 ஆம் ஆண்டு ஆசிரியர் பிரதீப பிரபா விருது கல்வியமைச்சினால் வழங்கப்பட்டமை சிறப்புக்குரியதாகும்.

(சி-7223)

வாழ்த்துபவர்கள்- ஆசிரியர் ஊழியர்கள் நலன்புரிச்சங்கம்,கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம்.



SLIIT | NORTHERN UNI | SLIIT ACADEMY | University of Bedfordshire

உலக நாடுகளின் வேலைவாய்ப்பிற்கான முதல் தடம்

உங்களது க.பொ.த உயர் தர பரீட்சையின் பிறகு

SLIIT NORTHERN UNI யுடன் பல்கலைக்கழ மானியங்கள் ஆணை குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட University of Bedforshire இன் பல தரப்பட்ட இளங்கலை பட்டப்படிப்பினை நீங்கள் விரும்பியவாறு யாழ்பாணத்தில் தொடரலாம்

2023 செப்டம்பர் உள்வாங்கல்.

க.பொ.த உயர் தர பரீட்சையில் ஒன்று அல்லது இரண்டு தேர்ச்சிகளுடன், தகவல் தொழில்நுட்பம் அல்லது வணிகத்தில் வெளிநாட்டு பட்டப்படிப்பினை ஒன்றை நீங்கள் பெறலாம்.



பட்டப்படிப்பு நிகழ்ச்சி திட்டங்கள் 3 வருடங்கள்

BSc (Hons) Computer Science and Software Engineering

BSc (Hons) Computer Networking

BA (Hons) Business Administration

UOB

குறைந்த பட்ச தகுதிகள்

IT/ Business

ஒரே அமர்வில் பெறப்பட்ட க.பொ.த உயர்தரபரீட்சையில் குறைந்த பட்ச்சம் ஒரு S தேர்ச்சி.

தகுதி பரீட்சை

16 SEP 2023
(10:30 a.m to 11:30 a.m)

மேலும் விவரங்களுக்கு : 077 147 1471

northernuni.lk apply@northernuni.com

239, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம், இலங்கை

(சி2121)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைப் பண்பு என்பது தற்சார்பற்று இருத்தல் நலம். தன்னலம் கருதிய தலைமை இன்றைய நிலைமையில் நிர்வாகத்தை தலைகீழாக மாற்றும் வல்லமை கொண்டது. *– யாரோ*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எங்கள் தமிழ்த் தலைவன் நல்லூரில் வீற்றிருக்க...

நல்லூர்க் கந்தப் பெருமானின் மகோற்சவத்தால் யாழ்ப்பாண மண் தெய்வீகப் பொலிவுடன் காட்சி தருகிறது.

அதிகாலைப் பொழுதில் பிரதட்சணம் செய்கின்ற இளைஞர்கள் நல்லூர்க் கந்தப் பெருமானின் நாமத்தை உச்சாடணம் செய்து அரோகரா என்று ஒலி எழுப்பும் அந்தக் கணம் கல் மனதையும் உருக வைக்கும்.

இதையும் கடந்து அடி அழிக்கும் பெண்களின் பக்தி பிரவாகம் ஈழத்திருநாடு தெய்வீகமானதென்பதை நிரூபிக்கும்.

ஆம், எங்கும் முருக நாமம். முருகா... முருகா... என்று சதா உச்சரிக்கும் அடியார் கூட்டம்.

ஆலயச் சூழல் எங்கும் தெய்வீகத் திருக் கோலம்.

கூடவே அன்னம் பாலிக்கும் அறப் பணியும் தாக சாந்தி நிலையங்களும் ஆற்றுகின்ற பணியை எப்படிச் சொல்வது.

நல்லூர்க் கந்தனிடம் வருகின்ற அடியவர்களுக்கு அமுதளித்து அடியார்க்கும் அடியேன் என்ற தெய்வீகத்தின் உன்னதத்தைப் பார்க்கும்போது, நல்லூர் முருகா என்று ஒரு கணமேனும் உச்சரிக்காமல் – அவன் திருவீதியில் உலா வராமல் இருக்க முடியுமா? என்ன?

ஆம், அலங்காரக் கந்தனாய் நல்லூர் முருகன் வெளி வீதி வருகின்ற காட்சியை எங்ஙனம் செப்புவது.

மின்குமிழ் அலங்கரிப்பு. அழகு நிறைந்த வாகனாதிகள். வானவர்க்கு இணையென நிற்கும் அந்தணச் சிவாச்சாரியார்கள். மங்கள வாத்தியங்கள். திருமுறைப் பாராயணங்கள். கற்பூர தீபங்கள். பழைமை மாறாத தீவட்டிகள் குடை கொடி ஆலவட்டம். மண்டபப் படிகள். கூடவே உருகாதார் மனதையும் உருக வைக்கும் திருவாசகம் எனும் இன்பத் தேன் ஈசான மூலையில் அடியார் காதினில் வந்து பாய,

முருகா பேரின்பப் பெருவாழ்வு இதுவன்றோ என்றுணர்த்தும் நல்லூர்க் கந்தனின் கருணையை என்னென்றுரைப்பேன்.

ஐயனே! அலை மோதுகின்ற அடியார் கூட்டம் உன்னை விட்டு விலக விருப்பமின்றி பின்னடையாய் வீதி வர, நீயோ! சரியாய் நேரம் பார்த்து உன் அலுவல் முடிக்கின்றாய்.

கந்தனே! எங்கள் தமிழ்த் தலைவனே! நீ நல்லூரில் வீற்றிருக்க எமக்கென்ன குறை.

எங்கள் தமிழினத்தின் பண்பாட்டு பெருமை நீயன்றோ.

உன் திருவீதியில் வலம் வரும் அடியார் கூட்டம் கண்டு என்னே! அற்புதம் என்று வியக்காத வெளிநாட்டார் யாருளர்.

ஆகையால் உன்னை நாடி வருகின்ற அடியவர்கள் உன் பெருமை காக்க வேண்டும்.

எங்கள் தமிழ்ப் பண்பாட்டின் உன்னதத்தை பாதுகாக்க இதனை நம் அடியார்கள் அனைவரும் செய்கின்றபோது இங்கிருந்தே எங்கள் பெருமை உலகமெல்லாம் பரவும் என்பதால், நாமே நம்மை ஆசாரமாக்கி கந்தனின் திருவீதியில் வலம் வருவோம்.

## நாட்டில் உயர்தர சுகாதார சேவை பேணப்படுவது அவசியம்

## ஜனாதிபதி திட்டவட்டம்

வெளிநாட்டினரை சிகிச்சைக்காக இலங்கைக்கு அழைத்து வருவதற்கு மருத்துவ சுற்றுலா மற்றும் உயர்தர சுகாதார சேவையை பேணுவது அவசியம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதிபட தெரிவித்துள்ளார்.

அதற்காக சுகாதாரக் கொள்கை மீள் கவனம் செலுத்தப்பட வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் ஜோசப் பிரேசர் வைத்தியசாலையின் 100 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்ட போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அதிகளவான வைத்தியர்களை உருவாக்க இந்நாட்டில் அதிகளவான மருத்துவ பீடங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென தெரிவித்த ஜனாதிபதி, இந்த நாட்டில் உள்ள சுகாதார பணியாளர்கள் பலமான எதிர்காலத்திற்காக மாற்றியமைக்கப்படவுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார். (ம-7,9)

## சுற்றுலாவிகளின் வருகை நாட்டில் அதிகரிப்பு

(கொழும்பு)

இம் மாதத்தின் முதல் ஆறு நாட்களில் மாத்திரம் 23 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, செப்டம்பர் மாதத்தில் மாத்திரம் 6 ஆயிரத்து 188 இந்திய பிரஜைகள் வருகை தந்துள்ளனர்.

இதேவேளை, ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து ஆயிரத்து 693 நபர்களும், ஜேர்மனியிலிருந்து ஆயிரத்து 513 பேரும், ரஷ்யாவிலிருந்து ஆயிரத்து 434 பேரும், அவுஸ்திரேலியாவிலிருந்து ஆயிரத்து 127 பேரும் நாட்டிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர்.

அத்துடன், சீனாவில் இருந்து ஆயிரத்து 114 சுற்றுலாப் பயணிகளும் இந்த மாதத்தில் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஆகஸ்ட் மாதத்தில் மொத்தம் 136,405 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதுடன், அதன்படி, இந்த வருடத்தில் இதுவரை 927,214 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர். (ம-7,9)

### காதலுக்காக இலங்கை வந்த யுவதி

## மாடியில் இருந்து விழுந்து மரணம்

(கொழும்பு)

கொழும்பு, அல்விஸ் பிளேஸில் உள்ள ப்ளூ ஓஷன் வீட்டுத் தொகுதியில் தங்கியிருந்த சின்னையா அழகேஸ்வரன் ரொமினா என்ற இளம் யுவதியொருவர் 13வது மாடியில் இருந்து கீழே விழுந்து உயிரிழந்துள்ளதாக கல்கிசை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிரித்தானிய குடியுரிமை பெற்று பிரித்தானியாவில் வசித்த இந்த யுவதி, பேஸ்புக் ஊடாக கொழும்பு வெள்ளவத்தைப் பகுதி சட்டக்கல்லூரி மாணவர் ஒருவருடன் காதல் வசப்பட்டிருந்தார்.

இதையடுத்து குறித்த பெண் இணையவழியில் முன்பதிவு செய்து அல்விஸ் மாவத்தையில் உள்ள குறித்தஅடுக்கு மாடி தொகுதியில் வீடொன்றை வாடகை அடிப்படையில் பெற்று கடந்த ஏப்ரல் மாதம் இலங்கைக்கு வந்து குறித்த இளைஞனுடன் தங்கியிருந்துள்ளார்.

இந் நிலையில் அவர் மீண்டும் இங்கிலாந்து செல்லவிருந்தநிலையில், நேற்று அதிகாலை இருவருக்கும் இடையில்வாக்குவாதம் ஏற்பட்டுள்ளதாகவும் அதனை தொடர்ந்தே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கல்கிஸ்ஸ பதில் நீதவான் திருமதி ரத்னாகமகே நீதவான் விசாரணைகளை மேற்கொண்டார்.

மேலும்குறித்த பெண்ணுடன் தங்கியிருந்த மாணவனை கைது செய்த கல்கிசை பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,9)

### போலி விசா மூலம்

## இத்தாலி செல்ல முனைந்தவர் கட்டுநாயக்கவில் கைது

(கட்டுநாயக்க)

போலியாக தயாரிக்கப்பட்ட விசாவைப் பயன்படுத்தி இத்தாலிக்குத் தப்பிச் செல்ல முயற்சி செய்த இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் மாலை கட்டுநாயக்க விமான நிலையத்தின் புறப்படும் முனையத்தில் வைத்து குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் கத்தாரின் தோஹா நோக்கிப் புறப்படவிருந்த ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானமான UL-217 இல் பயணிப்பதற்காக குறித்த இளைஞன் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

அங்கு குறித்த இளைஞன் தனது அனுமதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக விமான நிலையத்தில் சமர்ப்பித்த ஆவணங்கள் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் குடிவரவு, குடியகல்வு பிரிவின் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

அங்கு நடத்தப்பட்ட தொழிநுட்ப சோதனையில், குறித்த இளைஞன் தம்வசம் வைத்திருந்த போலந்து குடியுரிமை விசா போலியாக தயாரிக்கப்பட்டது என்பது உறுதியானது.

பின்னர் குறித்த இளைஞரிடம் மேற்கொண்ட விசாரணையில், மேற்படி விசா 40 இலட்சம் ரூபாய்க்கு ஒரு தரகரிடமிருந்து தான் பெற்றுக்கொண்டதாக அந்த இளைஞன் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது, குறித்த இளைஞனிடம் இருந்த கைப் பையில் மேலும் போலியாக தயாரிக்கப்பட்ட சில ஆவணங்களும் அதிகாரிகளால்மீட்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து, குறித்த இளைஞனைக் கைது செய்த, குடிவரவு மற்றும் குடியகல்வு பிரிவு அதிகாரிகள், அந்த இளைஞனை மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளனர். (ம-7,9)

## அரசாங்க நடவடிக்கைகளை டிஜிட்டல் மயமாக்க திட்டம்

(கொழும்பு)

2024 ஆண்டு மார்ச் 31 ஆம் திகதிக்குள் இலங்கையில் அனைத்து அரசாங்க பரிவர்த்தனைகளையும் டிஜிட்டல் மயமாக்கப்படும் என தொழில்நுட்ப அமைச்சின் கீழுள்ள DigiEcon 2030 இன் திட்டப் பணிப்பாளர் பிரசாத் சமரவிக்ரம தெரிவித்துள்ளார்.

கொவிட் 19 தொற்று நோய்க்குப் பின்னர், இலங்கையில் பெரும்பான்மையான மக்கள் டிஜிட்டல் பரிவர்த்தனைகளுக்கு மாறியுள்ளனர், இதுவே இந்த நடவடிக்கையை விரைவுபடுத்துவதற்கான காரணம் எனக் குறிப்பிடப்படுகிறது.

மேலும், டிஜிட்டல் மயமாக்கலை விரைவு படுத்தும் வகையில், தேசிய டிஜிட்டல் பொருளாதார முடுக்கும் திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் பின்னர், சர்வதேச நாணய நிதியம் உட்பட பல உலகளாவிய நிறுவனங்கள், மனித தலையீடுகள் மற்றும் ஊழலைக் குறைப்பதற்காக வரிக் கோரிக்கைகள் உள்ளிட்ட பரிவர்த்தனைகளை முழுமையாக டிஜிட்டல் மயமாக்குமாறு இலங்கை அரசாங்கத்திற்கு கடுமையாகப் பரிந்துரைத்துள்ளன.

இருப்பினும், பல அரசு நிறுவனங்கள் டிஜிட்டல் மயமாக்கலில் மெத்தனமாக இருப்பதாக அரசு அறிக்கைகள் கூறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைந்த விலையில் முருங்கை கொள்வனவு

## செய்கையாளர்கள் கவலை

(தருமபுரம்)

பல ஆயிரக்கணக்கான செலவில் மேற்கொள்ளப்பட்ட முருங்கை செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் இடைத்தரகர்களால் நாம் பெரிதும் பாதிப்படைந்துள்ளதாக முருங்கை செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பிரமந்தனாறு மயில்வாகனபுரம் பகுதியில் முருங்கைச் செய்கையில் ஈடுபடும் மாதிரி கிராமத்தில் பலர் முருங்கை செய்கையை பல வருட காலமாக தமது வாழ்வாதாரமாக மேற்கொண்டு வருகின்றனர். இத்த நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு 700 ரூபாய் 800 ரூபாய்க்கு விற்பனை செய்த முருங்கைக்காய் கிலோ ஒன்றின் விலை தற்பொழுது 35 ரூபாய் தொடக்கம் 40 ரூபாய்க்கு கொள்வனவு செய்யப்படுகின்றது.

35, 40 ரூபாய்க்கு கொள்வனவு செய்யப்படும் முருங்கைகாய் ஒரு கிலோவின் விலை 250 தொடக்கம் 300 ரூபாய் வரை விற்பனை செய்கின்றனர்.

இதன் காரணமாக பல விவசாயிகள் முருங்கைக்காய்களை விற்பனை செய்ய முடியாத நிலையில் உள்ளனர். இதனால் இடைத் தரகர்களே அதிக இலாபம் பெறுவதாகவும் வியாபாரிக்கும் நுகர்வோருக்கும் இலாபம் கிடைக்கப் பெறுவதில்லை எனவும் கவலை தெரிவித்துள்ளனர்.

பசளை, கிருமிநாசினி என பல ஆயிரக்கணக்கான ரூபாயை செலவழித்து முருங்கை செய்கையில் ஈடுபட்டு தற்பொழுது அறுவடை செய்த முருங்கை காயை விற்பனை செய்ய முடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர்.

இந்நிலை தொடருமாயின் இனிவரும் காலங்களில் முருங்கை செய்கையில் இருந்து விடுபட வேண்டிய நிலை ஏற்படும் எனவும் தெரிவித்துள்ளனர்.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து முருங்கைகாயை ஒரு கிலோ 100 ரூபாய்க்காவது கொள்வனவு செய்ய முன்வருமாறு முருங்கை செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி-316)

# அனுமதியின்றி மண் அகழ்வு

## ஜே.சி.பி பறிமுதல், சாரதி கைது



(தருமபுரம்)

தருமபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நெத்தலியாற்று பகுதியில் நேற்றுமுன்தினம் ஜே.சி.பி இயந்திரம் மூலம் அனுமதி இன்றி வயல் பகுதியில் மண் அகழ்வு இடம் பெறுவதாக இராணுவத்தினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய சம்பவ இடத்துக்கு விரைந்த இராணுவத்தினர் ஜே.சி.பி இயந்திரத்தை பறிமுதல் செய்துள்ளனர்.

மேலும் அதன் சாரதியையும் கைது செய்து தருமபுர பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் சந்தேக நபரை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். (நி-316)




கிளிநொச்சி மாவட்டத்தின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றி மாவட்ட பிரதி பொலிஸ் அத்தியட்சகராக பணிபுரிந்த குணரத்னவின் பிரியாவிடை நிகழ்வு கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. (படம்: தேவானந்தம்)

# அரிசி ஆலையில் தீ விபத்து

## பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசம்

## அளவெட்டி வடக்கில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அளவெட்டி வடக்கு பகுதி அரிசி ஆலையில் தீ விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக தெரிய வருகையில், நேற்று முன்தினம் மாலை அரிசி ஆலை வேலைகள் நிறைவடைந்ததனையடுத்து உரிமையாளரால் பூட்டிவிட்டு நேற்றுக் காலை 8 மணியளவில் அரிசி ஆலை திறக்கச் சென்றபோது அரிசி ஆலை தீப்பற்றி எரிந்து கொண்டிருந்ததை கண்ட உரிமையாளர் அயலவர்களை அழைத்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளார்.

இதன்போது பல லட்சம் ரூபாய் பெறுமதியான அரிசி ஆலை இயந்திரங்கள் ஏனைய உபகரணங்கள், தளபாடங்கள் என்பன எரிந்து முற்றாக நாசமாகி உள்ளன.

அரிசி ஆலை உரிமையாளரால் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தெல்லிப்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-6-33-104)

# கோடா கசிப்புடன் நபரொருவர் கைது

(தருமபுரம்)

கிளிநொச்சி மருதங்கேணி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வத்திரையான் மேற்கு மருதங்கேணி பகுதியில் உள்ள காட்டுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் மருதங்கேணி விசேட பொலிஸ் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 865 லீற்றர் கோடாவும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்திய தண்ணீர் தாங்கி ஒன்றினையும் பொலிஸார் மீட்டுள்ளதுடன் சந்தேக நபரை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மருதங்கேணி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-6-316)


# காணி விற்பனை



யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி 3 ஆம் ஒழுங்கை (முத்துமாரி அம்மன் கோயில்) அருகே 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு விலை பேசித் தீர்மானிக்கப்படும்
(தரகர் அவசியம் இல்லை) (17022)

தொடர்புகளுக்கு
077 892 8094, 076 995 2499


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 150 | 160 | 240 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 300 | 500 | 500 |
| தக்காளி | 160 | 140 | 100 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 180 | 200 |
| கோவா | 150 | 150 | 200 | 150 |
| கரட் | 350 | 300 | 300 | 350 |
| பூசணி | 60 | 80 | 80 | 80 |
| புடோல் | 100 | 70 | 80 | 150 |
| வாழைக்காய் | 200 | 220 | 180 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 200 | 120 | 180 | 200 |
| பாகற்காய் | 400 | 300 | 300 | 300 |
| வெண்டக்காய் | 100 | 80 | 80 | 200 |
| கருணைக் கிழங்கு | 150 | 170 | 150 | 200 |
| பயற்றங்காய் | 300 | 150 | 180 | 200 |
| லீக்ஸ் | 160 | 180 | 180 | 200 |
| பீற்றூட் | 120 | 120 | 130 | 160 |
| கறிமிளகாய் | 200 | 300 | 250 | 250 |
| முருங்கைக்காய் | 100 | 80 | 100 | 100 |
| போஞ்சி | 400 | 350 | 380 | 500 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 150 | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 60 | 120 |
| தேசிக்காய் | 700 | 700 | 800 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60 | 60-90 |
| இராசவள்ளி | 350 | 380 | 350 | 450 |
| வெங்காயப்பூ | 250 | 200 | 200 | 400 |
| முள்ளங்கி | 80 | 80 | 80 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 60 | 50 |
| வல்லாரை | 40 | 160 | 30 | 60 |
| ஈரப்பலா | 100 | 70 | 100 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்...

பலியாகியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கி வந்த கப் ரக வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வவுனியாவில் இருந்து புளியங்குளம் நோக்கி வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதில் பொலிஸ்கான்ஸ்டபிள் உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணை ஓமந்தை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

(ம-7,9,250)

## கிளிநொச்சியில்...

பட்ட வெடிகுண்டினை மீட்பதற்கான நீதிமன்ற கட்டளையை பெற்றதன் பின்னர், பொலிஸ் விசேட அதிரடிப்படையினால் வெடிகுண்டு மீட்கப்படவுள்ளது. (ம-7,9)

## ஊழல்...

விஜயதாஸ ராஜபக்ஷவினால் விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த சட்டமூலம் அண்மையில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7,9)

## விரிவான...

அரச சிரேஷ்ட அதிகாரிகள் மூவர் அடங்கிய குழுவொன்றை நியமிக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

பொலிஸ், சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் சிவில் சேவையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்தக் குழுவை நியமிக்க பாதுகாப்புச் சபைக் கூட்டம் தீர்மானித்துள்ளது. குழுவின் பிரதிநிதிகள் நியமனம் ஜனாதிபதியின் தலைமை அதிகாரி சாகல ரத்நாயக்க மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி, 'சனல் 4' அம்பலப்படுத்தல் தொடர்பில் ஆராய்வதற்காக பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை நியமிப்பதற்கும் ஜனாதிபதி தீர்மானித்துள்ளதுடன், ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர் பிரசன்ன ரணதுங்கவிற்கு அந்தப் பணியை வழங்கியுள்ளார்.

இந்த குழு அல்லது தெரிவுக்குழுவிடம் எந்தவொரு நபரும் தமது ஆதாரங்கள் மற்றும் தகவல்களை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-7,9)

## ஆசிரியை...

விளையாட்டுக்கழக மைதானத்திற்கு அருகாமையில் நடந்து சென்றுகொண்டிருந்தபோது உந்துருளியில் வந்த இருவர் ஆசிரியையின் சங்கிலியை அறுத்துச் செல்ல முற்பட்டனர்.

ஆசிரியையும் எதிர்ப்புக் காட்டிய நிலையில் இரண்டு சங்கிலி அணிந்திருந்த நிலையிலும் அதன் பாகங்களே அறுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைபிடப்பட்டுள்ளது. (ம-7,9,60)

## திருமலையில்...

திருகோணமலை நிலாவெளி பிரதான வீதியின் பெரியகுளம் சந்திக்கு அருகில் உள்ள இலுப்பைக்குளம் பகுதியில் பொரலுகந்த ரஜமகா விகாரை எனும் பெயர் பொறிக்கப்பட்ட பதாகை நடப்பட்டுள்ளதால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

குறித்த பதாகை நேற்றுக் காலை பௌத்த பிக்குகள் சிலரால் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. குறித்த பதாகை நடப்பட்டதன் பின்னர், அப்பகுதியில் பொலிஸார் சிலர் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சிங்கள மக்களின் குடியிருப்பு இல்லாத பகுதியில் குறித்த விகாரை அமைக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இச்செயற்பாடானது இனங்களுக்கிடையே முறுகல் நிலையை ஏற்படுத்தும் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்து வருகின்றனர்.

அத்துடன் குறித்த விகாரைக்கான பணிகளை இடைநிறுத்தக் கோரி ஆளுநரினால் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் இச்செயற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேலும், இலுப்பைக்குளம் பகுதியில் குறித்த விகாரை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து பொதுமக்களால் கடந்த ஞாயிற்றுக்கிழமை பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (ம-7,9)

## ராஜபக்ஷக்களை...

யான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

"இலங்கையை மாத்திரமல்ல ஒட்டுமொத்த சர்வதேச சமூகத்தையும் அதிர்ச்சிக்குள்ளாக்கும் வகையில் "சனல் 4" வெளியிட்டுள்ள காணொலியை நிராகரிக்க முடியாது. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணை கட்டாயம் வேண்டும்" என்றும் ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

அக்கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. இதனைத் தெரிவித்துள்ளார்.

"2019இல் மக்களைக் கொன்று ஆட்சியைப் பிடித்த ராஜபக்ஷக்கள், கடந்த வருடம் (2022) மக்களைப் பட்டினியால் சாகடித்து ஆட்சியைத் தக்கவைக்கலாம் என்று கனவு கண்டுள்ளார்கள். ஆனால், வீறுகொண்டு எழுந்த மக்கள், ராஜபக்ஷக்களைக் கூண்டோடு பதவிகளிலிருந்து விரட்டியடித்தார்கள்" என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

"சகல விதமான ஊழல் - மோசடிகளிலும் ராஜபக்ஷ குடும்பத்தினர் தொடர்புபட்டுள்ளனர். எனவே, ராஜபக்ஷக்கள் அனைவரையும் சிறைக்கு அனுப்பியே தீர வேண்டும்" - என்றும் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. மேலும் வலியுறுத்தியுள்ளார். (ம-7,9)

## மனி...

கள் மீட்கப்பட்டதோடு தமிழீழ விடுதலைப்புலிகளின் அடையாள இலக்கத் தகடு ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வு பணிகள் செப்டம்பர் 6ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று 4ஆம்நாள் அகழ்வு பணிகள் நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினர் மற்றும் தொல்லியல் ஆய்வாளர் பரமு புஷ்பரட்ணம், யாழ்ப்பாணம் சட்டவைத்திய அதிகாரி உட்பட சட்டத்தரணி எஸ்.துஸ்யந்தி ஆகியோரின் பங்கேற்புடன் முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய நான்காவது நாள் அகழ்வின்போது சில முக்கிய தடயப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ள போதிலும் இது தொடர்பாக அதிகாரபூர்வமாக கருத்து தெரிவிப்பதற்கு அதிகாரிகள் மறுப்பு தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அடையாள இலக்கத் தகடு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இருந்தபோதிலும் இது தொடர்பில் அதிகாரப்பூர்வமாக தகவல் வெளியிட யாழ். சட்ட வைத்திய அதிகாரி செ.பிரணவன் மறுப்பு தெரிவித்துள்ளார்.

இதேவேளை இன்றும் குறித்த மனிதப் புதைகுழி வளாகத்தை பார்வையிடுவதற்கென யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் குழு ஒன்று வருகை தந்திருந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9,299)


விற்பனையாளர் தேவை

தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையில் லொத்தர் டிக்கெட்டினை விற்பதற்கு யாழ்ப்பாணம், கொக்குவில், திருநெல்வேலி போன்ற இடங்களிலுள்ள லொத்தர் கூடுகளுக்கு லொத்தர் விற்பனையாளர் தேவை. (17029)

077 603 1723, 077 213 3460

மெகா பவர்
திகதி 09/09/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1580
I 04 19 22 31 76
16185

தன நிதானய
திகதி - 2023.09.09
சீட்டிழுப்பு இலக்கம் - 1262
D 29 38 69 81 D
45364

லக்கி 7
திகதி 09.09.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0058
L7 இலக்கம் 3 7
வெற்றி இலக்கினம் கடகம்
வெற்றி இலக்கங்கள் 2 2 2 5 8 8

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3474
சீட்டிழுப்பு திகதி 09.09.2023
L 23 25 75 79
L 28749

ஹந்தஹன
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.09.09
சீட்டிழுப்பு இலக்கம் 541
கன்னி 10 18 45 62 கன்னி

மஹஜன சம்பத
திகதி 2023/09/09
சீட்டிழுப்பு இலக்கம் 5232
Y 4 0 9 4 9 7

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2206 | வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.09.09 | தினம் சனிக்கிழமை
02 08 22 44 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 65,741,308.40
97683 476

சனிதா
திகதி 2023.09.09 வெற்றி வாரம் 4367 வர்ணம் இளம் பச்சை
09 18 35 41 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,892,552.00
38937 982
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3918 | வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.09.09 | தினம் சனிக்கிழமை
13 22 26 34 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 8,744,712/-
59591 358

கப்றுக
திகதி 09.09.2023 வெற்றி வாரம் 1382 வர்ணம் சிவப்பு
Y 20 04 34 56 66
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 437,842,634.20
98822 812
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சம்வர்தன வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 627 | திகதி 2023-09-09 | வர்ணம் ஆரஞ்சு நிறம்
T 11 45 64 07
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 11,129,384.00
DLB DEVELOPMENT LOTTERIES தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம்: 2032
வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2023.09.09
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,181,360/-
19 40 44 67 P
28128 432


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கு ஸ்ரேசன் வீதியில் (காளி கோயிலுக்கும் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்திற்கும் இடையில்) 1 1/2 பரப்புக்களாக பிரிக்கப்பட்ட நிலையில் காணித்துண்டுகள் விற்பனைக்குண்டு. (16957)

**077 728 6061**

## 1037 பேர்...

விட்டதாக அந்நாட்டு உள்துறை தெரிவித்துள்ளது.

மேலும் நூற்றுக்கணக்கான மக்கள் காயமடைந்துள்ளனர். ஆயிரக்கணக்கான மக்களின் வீடுகள் சேதமடைந்துள்ளன. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.8 ஆக பதிவாகியுள்ளது.

இது தொடர்பில் முன்னர் கிடைக்கப் பெற்ற செய்தி உள்ளே. (ம-7)

## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற **SILVER SHIELD SOCKS** பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்**

உலகெங்குமுள்ள உறவுகளிமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7187)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
**303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 5392, 076 315 6470**

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 11.09.1978 | மறைவு 07.09.2023

எமது நிறுவன மாணவி **சதுர்சனா சிவகுமார்** அவர்களின் அன்புத் தந்தை

அமரர் **துரை சிவகுமார்**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கும் உறவுகளுக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

பிரிவுத்துயரில் கலந்திருக்கும்

பலாலி வீதி, உரும்பிராய் | வள்ளுவர் அக்கடமி கல்விச் சமூகம் (C-7226)

## Happy Supermarket - உரும்பிராய்

**உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...**



| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 258/= | (max2Kg) |
| 1 Kg கோதுமை மா | - 183/= | |
| 1 Kg Prima கோதுமை மா | - 197/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 289/= | (max2kg) |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 437/= | |
| 1 Kg தீட்டல் | - 186/= | (Max 3Kg) |
| 1 Kg றவை | - 288/= | |
| 400 g அங்கர் பால்மா | - 1050/= | ~~(1080/=)~~ |
| 400 g அன்லீன் பால்மா | - 1250/= | ~~(1350/=)~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 50/= | ~~(80/=)~~ |
| 330g கோல்ட் மாரி பிஸ்கட் | - 262/= | ~~(330/=)~~ |
| 01 சந்தூர் சவர்க்காரம் | - 140/= | ~~(175/=)~~ |
| 1 Kg சன்லைட் றோஸ் பவுடர் | - 360/= | ~~(430/=)~~ |

(17030)

**Family pro Promotion உடன் இணைந்திருங்கள் Family pro கொள்வனவு செய்யும் அனைவருக்கும் பரிசில்கள் உண்டு.**

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. | Happy Supermarket **0777 8080 30**

## A/L Online Classes

**Biology & Chemistry**

Conducted by

**Jaffna Lecturer** (16877)

**077 807 5566**

## காணி விற்பனைக்கு

ராஜ பாதை வீதி , கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய முன் வீதியில் (மிக அண்மையில்) 11 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்கு உள்ளது. (16934)

**077 307 5198**

## கடை களஞ்சியத்துடன் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் களஞ்சியத்துடன் கூடிய 2 மாடி கடை குளியலறை வசதிகளுடன் விற்பனைக்கு தொடர்பு (16954)

**077 728 0826**

## மணமகன் தேவை

யாழ் இந்து 1991 விசாகம் 2 ஆம் பாதம் துலாம் இராசி கிரக பாவம் 11 M.B.B.S டாக்டர் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை. (16923)

**076 561 4313**

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

**076 636 3378, 076 097 3127**

## பணிப் பெண் தேவை

யாழ்.நகரில் உள்ள 05 பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு தங்கி நின்று வேலை செய்யக்கூடிய 40-55 வயதுடைய இரு பெண் வேலையாள்த் தேவை

- சமையல் வேலை
- இரு குழந்தைகளைப் பராமரிப்பதற்கு

சம்பளம் ஒருவருக்கு 45,000/-

**075 498 5400, 077 937 0000**
**075 988 1000** (16956)

## விமலம் திருமண சேவை

தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற மணமகன், மணமகள் தேவையெனில் எம்முடன் தொடர்பு கொள்ளவும் (16849)

**0016 4765 71347** (கனடா)
**0014 3724 46737** (கனடா)
**077 240 9276** (தாயகம்)

## வீடு விற்பனைக்கு

முல்லைத்தீவு மாஞ்சோலையில் சுற்று மதிலுடன் 2 பரப்பு காணியுடன் புதிய வீடு விற்பனைக்கு உண்டு.

**தரகர் தேவையில்லை** (17017)

**076 355 5387**

## கொழும்பு விலையில்...

### யாழ் நகரில் கோழிகள் விற்பனைக்கு உண்டு

**புறோயிலர், கல்பேட்ஸ், பேரன்ஸ் ஊர்க்கோழி, சேவல், விறாத்து குஞ்சுகள் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. முட்டைகள் அனைத்தும்ஒரே இடத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.**

**(சுகாதார முறைப்படி சுத்தம் செய்து தரப்படும்)**

- 1Kg சுத்தம் செய்யப்பட்ட புறோயிலர் இறைச்சியின் விலை - 1250/=
- 1Kg சுத்தம் செய்யப்பட்ட பேரன்ஸ் இறைச்சியின் விலை - 1200/=

**நியூ சிற்றி பாம்**
**நியூ சிற்றி கோழிக்கடை**
**இல.8, சின்னக்கடை**
**மார்க்கெட் குருநகர், யாழ்ப்பாணம்.** (17021)

## பெண் வேலையாள் தேவை

யாழ் நகரில் உள்ள கடை ஒன்றிற்கு 18 -30 இற்கு உட்பட்ட பெண் வேலையாள் தேவை. (16841)

**சம்பளம் - 30,000 + மதிய உணவு**

**077 937 0000**
**075 988 1000**

## வீடு வாடகைக்கு

வெள்ளவத்தையில் 42 ஆம் வீதியில் 3 ஆம் இல. இரண்டு அறை, குசினி, இணைந்த குளியலறையுடன் கூடிய அடுக்கு மாடி வீடு நாள், கிழமை, மாத வாடகைக்குண்டு. (16981)

**075 278 6033**
**077 875 7860**

## உடனடி வேலை வாய்ப்பு

**நிர்வாக உத்தியோகத்தர்**



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- திருகோணமலை
- கோப்பாய்
- பண்டத்தரிப்பு
- கொழும்பு
- சுன்னாகம்
- மானிப்பாய்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- புத்தூர்
- சங்கானை

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

**சம்பளம் - 30'000/-**
பயிற்சியின்போது - 25'000/-

**0777-068-777**
v2vacancies@gmail.com (C-7227)

## WORK IN UK

**WORK PERMITS**

**CONSTRUCTION WORKERS**

- 5 YEAR WORK PERMITS
- குடும்பத்தவர்களை உடன் அழைத்துச் செல்லும் வாய்ப்பு
- 5 வருடங்களின் பின் நிரந்தர வதிவிட உரிமை (Permanent Resident)

✓ BRICK LAYERS ✓ SHUTTERING CARPENTERS
✓ SHUTTERING JOINERS ✓ STEEL FIXERS
✓ ELECTRICIANS ✓ PLUMBERS
✓ STEEL ELECTORS FOR STRUCTURES

போன்ற துறைகளில் வேலைசெய்பவர்களுக்கு பொருத்தமான உடனடி வேலை வாய்ப்புக்கள்



மாணவர்களும், கட்டுமானத்துறையில் அனுபவமுள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம் (C-7227)

**CIMS COLLEGE 0777-068-777**

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தினால் இல. 19, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org